www.tamilarangam.net

# சமர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சமரச பேச்சு பற்றி.....

“ அடிக்கு அடி”, “பழிக்கு பழி” எவ்வாறு கொடுப்பது என்பது சூழ்நிலையைப் பொறுத்தது. சில சமயங்களில் சமரச பேச்சுவார்த்தைக்கு போகாமல் இருப்பது “அடிக்கு அடி” ஆகும். சில சமயங்களில் பேச்சுவார்த்தைக்கு செல்வது கூட “அடிக்கு அடி” ஆகும்... அவர்கள் தாக்க ஆரம்பித்தால், நாம் திருப்பி தாக்குகிறோம். விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களை தாக்குவதற்கு துணிகின்ற பிற்போக்காளர்களை வன்முறையாக அடித்து வீழ்தாமல் அமைதியைப் பெறமுடியாது.

(மா.ஓ)

**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் மாபெரும் சக்தியாக உருவாகும்**



**அனைத்துவித திரிபுவாதங்களுக்கும் எதிராக 'சமர்'. இது ஒரு மக்கள் பத்திரிகை!**

## உள்ளே


| | |
|---|---|
| கோடிக்கணக்காக மக்களின் இரத்தத்தை.... | பக்கம் - 9 |
| உணவுக் கலவரம் | பக்கம் -12 |
| தமிழினத்தை அழிக்க நடந்ததே!!! | பக்கம் -53 |
| சரிநிகரே! எது உங்களின் கருத்து? | பக்கம் -56 |
| செர்பிய நெருக்கடியும்.... | பக்கம் -61 |

www.tamilarangam.net



# பிழைப்புவாத மலையக தலைமைகளும்

## மலையக மக்களின் எதிர்காலமும்

நடந்து முடிந்த இலங்கைத் தேர்தல் முடிவுகளில் மலையகத் தேர்தல் பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. தேர்தலில் மலையக மக்கள் யாருக்கும் உறுதியாக வாக்களிக்காதது, மலையக மக்களின் அதிருப்த்தி உணர்வுகளை, கடந்த காலங்களில் தாம் ஏமாற்றப்பட்ட வரலாற்றின் கற்றுணர்வுகளையே இந்த வாக்களிப்பின் மூலம் காட்டியுள்ளனர்.

தொண்டமான் குடும்ப கொள்ளைக் கட்சியும் அதற்கு மாற்றாக கொள்ளையிட புறப்பட்ட சந்திரசேகர் கும்பலும் சிங்கள இனவாதத்துடன் இணைந்து, தமிழ் இனத்தை கொன்று குவிக்க துணை புரிந்ததுடன், உலக ஏகாதிபத்தியமும் உள்ளூர் ரவுடி முதலாளிகளும் கொள்ளையடிக்க பச்சைக்கொடி காட்டி அதன் எலும்புத் துண்டுகளை நக்கித்திரிந்தனர்.

இந்த இரு பிழைப்புவாத துரோகக் கும்பலும் அதைவிட மலையகத்திலுள்ள சிறு குழுக்களும் மலையக மக்களின் மீட்பர்களாக கடந்த காலங்களில் காட்டிவந்தனர். அவர்களின் பிரச்சனை மீது, அவர்களின் சந்தாப்பணத்தின் மீது உயிர்-வாழ்த இந்தப்பிரிவுகள் அந்த மக்களை ஏமாற்றி அரைவயிற்று கஞ்சிக்கே வேட்டுவைத்து வந்தனர்.

உலகில் எல்லாம் மாறுகின்றன. ஆனால்

**சிறை என்பது நீதியின் சின்னமல்ல: அது குற்றத்தின் சின்னமே**

அமிர்தரசிலுள்ள மத்திய சிறைக்குச் சென்ற இந்தியா பெண்களுக்கான தேசிய கமிசன் தலைவர் மோகினிகிரி அங்கிருந்த 60 பெண்கள் வரை ஆய்வுசெய்தார்.

இது அவருக்கு மட்டுமல்ல உலக நீதிக்கே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அவரின் முடிவு அமைந்தது. 60 பெண்களில் 5 பேர் மட்டுமே குற்றவாளிகள் என தண்டிக்கப் பட்டவர்கள். ஏனையோர் விசாரனைக் கைதிகள் என்பதுடன், இரண்டு மூன்று வருடங்களாக எந்தவித விசாரனையும் இன்றி அடைக்கப் பட்டுள்ளனர். நீதி கிடைக்குமென்ற நம்பிக்கையை இழந்து வாழ்க்கை முழுவதும் கண்ணீருடன் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் கிடக்கின்றனர். இப்படி இந்தியாவில் எத்தனை பேர் உள்ளனர் என ஆராயின் நிட்சயமாக மூக்கில் விரலை

www.tamilarangam.net



மலையக மக்களின் மாட்டுக்கொட்டகை லயன் முதல், அவர்களின் வாழ்க்கை மட்டும் அப்படியேதான் உள்ளன. அதில் மாற்றமா எனின் வெறும் வாக்குறுதிகள் மட்டுமே, ஆண்ணடாண்டு காலமாகக் கண்ட மிச்சம்!

இன்று மலையகத்தின் விடிவெள்ளி என்று எதுவுமே இல்லை. மாறாக பல வெவ்வேறு இனவாதிகளின் குத்தகை நிலமாக இன்று மலையகம் மாறியுள்ளது. இனவாதிகள் இதை தமிழ் மக்களின் இன பிரச்சனைக்கு எதிரானதாகக் காட்ட ஒரு வாய்பு உள்ளதுதான். இதை மட்டும் பார்க்கும் பலர் தொண்டமான் போன்ற கும்பல்களை சுயவிமரிசனம் செய்து இன்னமும் கொள்ளையடிக்கக் கோருகின்றனர்.

மாறாக இன்று மலையகத்தில் அந்த மக்களின் பிரச்சினை மீதான புதிய தலைமை ஒன்றின் தேவை மட்டுமே எஞ்சியுள்ளது. அது மலையக மக்களை மட்டுமன்றி, இலங்கை மக்களுக்கே ஒரு மாற்றாக மாற முடியும்.

தமிழ்குறும்தேசிய இனவாதத்துக்கு எதிராக, சிங்கள இனவாதத்துக்கு எதிராக, உள்ளூர் கொக்கைக்கார முதலாளிகளுக்கு எதிராக, ஏகாதிபத்தியங்களின் கொள்ளைகளுக்கு எதிராக உருவாகும் அமைப்பு மட்டுமே இன்று மலையக மக்களுக்கும் சரி, இலங்கை மக்களுக்கும் சரி ஒரே ஒரு மாற்றுத் தீர்வாகும். இதுபற்றி கதையாத போசாத எல்லா எழுத்துக்களும், உண்மையில் அந்த மக்களை வேட்டையாடும் பிரிவுகளின் வெவ்வேறு குரல்களே ஒழிய, ஒரு விடிவெள்ளி அல்ல என்பதை நாம் இனம் கண்டு கொள்ள வேண்டும். இல்லையேல் புரட்சிக்கு நாம் துரோகமிழைப்போம்.

வைக்கமுடியும்.

ஆனால் ஜெயலலிதா




என்ற ஜனநாயகக் கொள்ளைக் காரிக்கோ சிறையில் ஐந்து நட்சத்திர வாழ்க்கை! அதையிட்டுக் கலைப்பட பல கொள்ளைக்காரர் கள்!

ஊரையே கூட்டிக் கொள்ளையடித்தவன் சட்டத்தின் காவலனாக உள்ளவரை நீதி கிடைக்காது. சிறை களிலும், சித்திர வதைகளிலும் காலத் தைத் தள்ள ஒரு கூட்ட மக்களை தயாராக வைத்துள்ளனர் இந்த வெட்கம் கெட்ட நீதி யின் காவலர்கள். இது தான் ஜனநாயம் என்றும், உலகில் மிகப் பெரிய ஜனநாயகம் இதுவென்றும் புளுகுவர். இதை நாம் நம்பப் போகிறோமா? வேறுக்கப் போகிறோமா?

www.tamilarangam.net



# ஆணாதிக்க கத்தோலிக்க மதம்




"கேளுங்கள் தரப்படும்! தட்டுங்கள் திறக்கப்படும்! தேடுங்கள் கண்டடைவீர்! என்ற புனித வாக்குக்களை ஓதும், உன்னத மனித விமோசனத்துக்காக உருவான மதம் எனக் கூறப்படும்கத் தோலிக்க மதமானது ஆணாதிக்கம் சார்ந்த, கருத்துச் சுதந்திரத்தின் மறுப்பை உள்ளடக்கியது என்பது அண்மைய ஒரு நிகழ்வால் மேலும் வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய மதகுருவான திஸ்ஸ பாலசூரிய எழுதிய 'மேரியும் மனிதவிடுதலையும்' (Mary and Human liberation) என்ற புத்தகத்தில் பெண்கள் அதாவது அருட்சகோதரிகள் பூசைசெய்ய அனுமதிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். ஏற்கனவே அருட்சகோதரிகள் தாமே திருப்பலியை நிறைவேற்றவும், பாவ சங்கீத்தனத்தை ஓர் ஆண் குரவானவரிடம் பெற்றுவருவதை ஆட்சேபித்தும், தம்மை ஒரு குருவாணவருக்குச் (ஆண்) சமமாக நடத்தப்பட வேண்டுமெனக் கோரி அவை நிராகரிக்கப்பட்டதும் நீங்கள் அறிந்ததே.

பெண்களும் பூசைசெய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்று எழுதுவது, பிரச்சாரம் செய்வது கத்தோலிக்க ஜனநாயப் பாரம்பரியத்துக்கு விடப்படும் மிகப்பெரிய சவால் எனக் கண்டுவரும் வஸ்திக்கான், திஸ்ஸ பாலசூரியாவின் குருநிலைப் பத வியைப் பறித்துள்ளது. இதற்கான எந்த விளக்கத்தையும் இந்த ஜனநாயக வத்திக்கானால் கொடுக்கமுடியாது, கொடுக்காது விட்டதுடன் ஆணாதிக்க சர்வாதிகாரத்தைப் பாதுகாக்க, இந்த முன்னேறிய உலகத்திலும் வக்கிரமாகச் செயற்படு வருகின்றனர்.

## உன்னத சீனாவில்.........

பீக்கிங் பல் கலைக்கழக முன்னாள் தலைவர் Wu shuqing விடுத்த அறிக்கையில் மேற்கு நாட்டு ஆதிக்கமும், சீர்குலைவும் ஏற்படுவதாக சுட்டிக்காட்டினார். இதிலிருந்து மீள மார்க்சிய அணுகுமுறையை மீளவும் கைகொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். ஆனால் முதலாளித்துவ மீட்சியாளர்கள் கவலையின்றி சீனாவை மேற்குநாடுகள் விபச்சாரம் செய்ய 1950க்கு முந்தியதை விட அதிகமாகவே திறந்துவிட்டுள்ளனர். சீனாவைக் கமியூனிச நாடு என்போரும், அங்கு முதலாளித்துவ மீட்சி நடக்கவில்லை என்று கூறும் மார்க்சிய வேடமிட்ட முதலாளித்துவ பன்றிகள் என்ன கூறுவர் எனக் கற்பனைபண்ணிப் பாருங்கள். ●



www.tamilarangam.net



## இந்திய நீதிமன்ற பார்ப்பானியத்தனமும், பார்ப்பானிய காட்டுமிராண்டித்தனமும்

20ம் நூற்றாண்டின் உன்னத வளர்ச்சியையும் தாண்டி, 21ம் நூற்றாண்டில் காலடி எதுத்துவைக்க எள்ளது இந்த உலகம்.

ஆனால் காட்டுமிராண்டித் தனமான பார்பானர்களின் சம்பிரதாயபூர்வமான உடன்கட்டை ஏறும் வழக்கத்தை மறைமுகமாக இந்திய பார்பானிய நீதிமன்றம் இந்த நூற்றாண்டிலும் அங்கீகரித்து வருகிறது. காலாசாரம் என்ற பெயராலும், பெண் ஆணின் அடிமை என்ற பெயராலும், பெண்களை பலாத்காரமாக சிதையில் இட்டு, அதைக் கூத்தாடிக் கொண்டாடுகின்றனர் - பார்ப்பானர்கள்.



1987 செப்ரெம்பர் 4ம் திகதி ரூப்கன்வார் என்ற இளம் பெண்ணை கணவனின் சிதையின் மேல் பலாத்காரமாக இருத்தி வைத்து, பார்பான ஆணாதிக்க வாதிகள் தீயிட்டு மகிழ்ந்தனர். இந்த தீ வைப்பு பெண்ணினத்துக்கு வைக்கும் தீ மட்டுமன்றி, இந்திய எங்கிலும் பார்பானிய காட்டுமிராண்டித்தனத்தை, அது தகர்ந்துவரும் வடிவின் மேல் மீளத்திணிக்கும் முயற்சியின் ஓர் அங்கமாகும். இதை இந்திய நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது என்பது ஜனநாயக மக்களுக்கு விடப்படும் சவால்தான்.

இதன் மீதான தீர்ப்பை கடந்த பத்துவருடங்களாக தூங்கப்போட்ட இந்தியப் பார்பான நீதிமன்றம், குற்றவாளிகள் தப்பிக்கும் வகையில் சாட்சிகளை அழிக்கத் துணைபோனபின், அவர்கள் குற்றவாளிகள் அல்லர் என எங்குமில்லாத ஒரு தீர்ப்பை வழங்கினர். படித்த ஒரு பெண் அதுவும் அவர்களின் உறவினருக்கே தெரியப்படுத்தாது, பார்பபானிய இந்துமதம் அப்பெண்ணுக்குத் தீ மூட்டியுள்ளது. பார்ப்பானிய இந்து ஆணாதிக்கம் என்பது இந்திய நீதி மன்றங்களையும்



www.tamilarangam.net



# தாய்நாட்டை .....

## அடையாளப்படுத்துதல் வாழுநாட்டில் தனது இருப்புக்கான (நிற, இன வாதத்துக்கு எதிரான) போராட்டத்தில் மட்டுமேயாகும

19-11-96

ஈழமுரசில் ஒரு விளம்பரச் செய்தி!

" அப்பா, அம்மா எங்கள் நாடு எங்கே? நம் குழந்தைகளின் கேள்வியின் விடை உங்கள் நிதிப் பங்களிப்பில் தான் உள்ளது." இதுதான் வினம்பரச் செய்தி.

இது சாதாரண அறிவியலும், சவால்விடும் முட்டள்தனமுமேயாகும். தாய்நாட்டை வெறும் பண்டமாக, நிதியாக மாற்ற நினைப்பது கடும் விமர்சனத்துக்குரியது. சர்வதேச ஏகாதிபத்தியங்கள் முதல கொண்டு பலரும் நாடுகளுக்குப் பணம் கொடுக்கின்றனர். இது மட்டும் நாட்டுப்பற்றை ஏற்படுத்திவிடுமா என்ன? அல்லது நாட்டை விற்கப்பயன்படாதா என்ன?

குழந்தையின் கேள்விக்கு நிதி கொடுப்பதால் எப்பொழும் பதில் கிடைப்பதில்லை. பணம் கொடுப்பதால் எப்படிக் குழந்தைக்குத் தாய்நாட்டைத் தெரியவரும் என விளம்பரத்தால் விளக்கவே முடியாது. பிள்ளை தனது தாய்நாட்டைத் தெரிந்து கொள்வது என்பது இந்த சமுதாயத்தில் தனது இருப்புக்கான

விட்டுவைக்கவில்லை என்பதற்கு இது ஓர் அழகான எடுத்துக்காட்டு. இங்கு ஜனநாயகம் என்பது பெண்களுக்கு அல்ல ஆண்களுக்கும் அதன் ஆதிக்கத்துக்கும் சார்பானது என்பதற்கு இந்த நீதிமன்றத் தீர்ப்பு ஒரு சாட்சி

இந்த நீதிமன்றத் தீர்ப்பை வென்றெடுத்த பார்ப்பான ஆதிக்கவாதிகள் அதைக் கொண்டாட, அதைப் பாதுகாக்கும் போலி இந்திய ஜனநாயக அரசு, பொய்யான ஆவணங்களைத் தயார்செய்து குற்றவாளிகளைத் தப்பிக்க வைத்துள்ளது. இந்த வெட்கக் கேடான தீர்ப்பை மாற்ற இந்த போலி ஜனநாயக பாராளுமன்றத்தை நம்பியிருக்க முடியாது. இது மக்கள் நீதிமன்றத்தின் மூலமே சாத்தியமாகும். ஆதை நோக்கி மக்கள் அணிதிரளும் வரை இந்தக் குற்றவாளிகளே அரசாகவும், பொலீசாகவும், நீதித் துறையாகவும் இயங்கிக் கொண்டிருப்பதைத் தடுக்கவே முடியாது.

www.tamilarangam.net




போராட்டத்தின் ஊடாகத்தான். இங்குள்ள இன, நிற வெறிக்கு எதிராக நடத்தும் போராட்டத்தில், குழந்தையானது தனது தாய்நாட்டைத் தேடத் தொடங்குவதிலிருந்தே தெரிந்து கொள்ள முற்படுகின்றது.

பணம் பண்ணுவதற்காக குழந்தையை பிழையான வழியில் வழிநடத்தக் கோருவதும், குழந்தையின் தாய்நாட்டை அதன் சரியான எண்ண நிலைப்பாட்டிலிருந்து தொலைத்து விடுவதற்குச் சமம். இந்த விளம்பரமானது குழந்தை தனது இருப்புக்கான போராட்டத்தில் இருந்து தனது தாய்நாட்டைத் தேடித் தெரிந்து கொள்வதற்குப் பதிலாக, அதைத் தெரிந்து கொள்ளவே முடியாத முடக்கல் வாதத்துக்குள் வழிநடாத்திச் செல்லும் மந்தப் போக்கேயாகும்.

அனைத்துவித
முற்போக்கு
நூல்கள்,மற்றும்
மார்க்சிய நூல்கள்,
நாவல்கள், சிறுகதை,
கவிதை என
அனைத்தையும் சமர்
ஊடாகப் பெற்றுக்
கொள்ள முடியும்!
20க்கு மேற்பட்ட பெரிய
சிறிய புத்தகங்களுக்கு
சராசரி விலை 10
பிராங்குகள் மட்டுமே!

மற்றும் முற்போக்கு
இசை
நாடாக்கள்,
அறிவியல்
கசட்டுக்களுக்கு
எம்மை
நாடுங்கள்.






இன்னும் மலராத் தேசமொன்றில்
இருந்து வந்தவன் நான்
இங்கு பிறந்தது..
நான் மட்டுமல்ல
நீ மட்டுமல்ல
நாம், சகோதரர்கள்.....

தருதற்கு கை நிறைய
அன்புண்டு என்னிடத்தில்
'நானாய்' நிறைந்த
அன்பைவிட ஏதுமில்லை.
என்னிடம் ஓர் இதயமும்
அழுகைகளும் உண்டு.
ஆனாலும், அவை
எனது மட்டுமல்ல...

இன்னும் மலராத் தேசமொன்றில்
இருந்து வந்தவன் நான்,
தருதற்கு நிறைய
அன்பினைத் தாங்கிய
நான்
இன்னும் மலராத் தேசமொன்றின்
பிரஜைகள் பலருள் ஒருவன்.

- மொஸாம்பிக் கவிஞர்
ஜொஸி கரவெயின் ஹா

www.tamilarangam.net



# கோடிக் கணக்கான மக்களின்



இரத்தத்தை விலை பேசிய, விற்ற ஒரு துரோகியின் மரணம்

டெங்சியபிங் இறந்ததைக் கண்டு உலகத்தலைவர்கள் எல்லாம் கண்ணீர் மல்கின்றனர். உலகச் செய்திகளோ மணிக் கணக்கில் ஒப்பாரி வைக்கின்றனர். சீனாவில் சனநாயகத்தை பகுதியளவு நிறுவிய தலைவர் என தம்பட்டம் அடித்து புகழ் பாடுகின்றனர். சினாவைத் திறந்து விட்டதன் மூலம், இரும்புத்திரையை உடைத்த மாமனிதர் எனவும் பாராட்டுகின்றனர்.

இறந்தபின் சீனாவின் முன்னணி முதலாளிகள் உள்ளிட்ட ஓர் அதிகார வர்க்க கூட்டத்தை மட்டும் உள்ளடக்கிய 10,000 பேர் தமது இறுதி அஞ்சலியை செலுத்த வந்த போது தமது பணப்பைகளை ஒரு முறை தட்டிப்பார்த்துக் கொண்டனர்.

இந்த மரணத்தைத் தொடர்ந்து செஞ்சதுக்கத்தில் திடீர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப் படலாம் என அஞ்சிய முதலாளித்துவ சர்வாதிகார அரசு, பல லட்சம்பேரை முன் கூட்டியே கைது செய்தது இவ்வாறுகைது செய்யப் பட்டோர் கம்யூனிட்டுகள் ஆக இருந்தனர் என்பது ஓர் ஆட்சரியமான விடயமே அல்ல. ஆயினும் இதையும் மீறி மக்கள் செஞ்சதுக்கத்தில் கூட முனைந்ததும், சீன பொலீசு சர்வாதிகாரம் மூலம் அரசு தடுத்தது.

டெங் 1920களில் பிரஞ்சு படிக்க வந்த காலத்தில், இங்கிருந்த ஒரு கார் தொழிச்சாலையில் வேலை செய்தபோது முரண்பட்ட நிலையில் வேலையை விட்டு நீக்கப்பட்டார். இதன் பின்னர் சீனா பிரஞ்சு கம்யூனிட்டுக் கட்சியில் இணைந்த பின், நாடு திரும்பிய பின் சீனக் கம்யூனிட்டுக் கட்சியில் இணைந்தார்.

1930ல் கட்சிக்குள் குழுக்கட்டி கட்சியை உடைக்க முனைந்தபோது, கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டார். பின் தன்னை சுயவிமர்சனம் செய்து கட்சியில் சேர்ந்து மாவோ உடன் இணைந்து போராடினார்.

www.tamilarangam.net



1949ல் சீனாவில் ஆட்சிக்கு வந்த கமினிசக் கட்சி பாட்டாளிகள், தேசிய முதலாளிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டரசை, அதாவது புதிய சனநாயக புரட்சியரசாக இருந்தது. இந்த ஆட்சியில் தொடர்ந்து பாட்டாளிகளுக்கும், தேசிய முதலாளிகளுக்கும் இடையில் நீடித்த ஐக்கியமும் - போராட்டமும் என்பது, ஆட்சி பலமுறை கைமாறியது. இக்காலத்தில் மாவோ தலைவராக இருந்தபோது அவர் இடையில் பெரும்பான்மையை இழந்திருந்தார். அந்தளவுக்கு முதலாளித்துவ பிரிவு தனது ஆட்சியை அமைக்க தொடர்ந்தும் போராடியது.

இதற்கு எதிராக மாவோவின் தலைமையில் கமினிட்டுகள் புரட்சிக்குப் பின் ஒவ்வோர் வினாடியும் போராடும்படி நிற்பந்திக்கப்பட்டனர். இதில் பல முதலாளித்துவ வலது பிரிவு, மற்றும் தீவிர இடது பிரிவுகள் இணம் காணப்பட்டு மக்கள் முன்னே அம்பலப்படுத்தப்பட்டனர். இதன் ஒரு வடிவமாக முன்னெடுக்கப்பட்ட கலாசார புடைசி முதலாளித்துவ பிரிவை ஒடுக்கி சோசலிச புரட்சியை முன்னெடுக்கும் பாதையை திறந்தது.

இந்நிலையில் டெங் தனது முதலாளித்துவ நிலையை இனம் காட்டியதால், புரட்சிக்குப் பிந்திய காலத்தில் ஒன்றுக்கு டேற்பட்ட முறை தனது பதவியை இழந்தார். இருந்தபோதும் மூடிமறைத்த சந்தர்ப்பவாத முதலாளித்துவத்தை முன்னெடுத்த டெங், மாவோவின் மரணத்தின் பின் சுயவிமர்சனத்தை ஒப்புக்கு செய்து விட்டு ஆட்சிக்கு வந்தான். வந்த அந்தத் துரோகி பலகோடி மக்கள் தங்கள் தங்கள் இரத்தத்தை சிந்தி போராடிப் பெற்ற விலைமதிப்பற்ற சீனாவை, ஏகாதிபத்தியத்திடம் மறுபடியும் அடகு வைத்தது மட்டுமன்றி, முன்னாள் முதலாளிகள் சிலரின், அதிகதர வர்க்கத்தின் சொகுசு வாழ்க்கைக்கு இசைவாக சீனாவை மாற்றினான். இன்று சீனா கமினிச கட்சியின் பெயரிலும், கமினிசக் கொடியுடனும் உள்ள ஒரு

## உலகையே உலுக்கும் மெஸ்சிக்கோ புரட்சியாளர்கள்

3-8-96ல் மெக்சிக்கோ சபாடிஸ்டா போராளிகள் அரச பயங்கரவாதத்தை எதிர்த்து தாக்குதலில் ஈடுபட்டனர். இத்தாக்குதலில் 100க்கு மேற்பட்ட இராணுவ பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

மெச்சிக்கோவை ஏகாதிபத்தியத்திடம் இருந்தும், தமது சொந்த நிலத்தையும் நாட்டையும் நிலப்பிரபுக்கள் மற்றும் தரகு முதலாளிகளிடமிருந்தும் மீட்கும் போரில் மக்கள் ஆயுதபதணிகளாகக் குதித்துள்ளனர். பரந்த தளப்பிரதேசத்தைக் கொண்டு போராடும் மக்கள் தமது மண்ணின் விடுதலைக்காக, தமது இரத்தத்தைச் சிந்தி போராடி வருகின்றனர். இது தென் அமெரிக்க விடுதலைக்கு ஒரு முன்னோடியாகவும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு சாட்டையடி கொடுக்கும் மெக்சிக்கோ புரட்சிகர எழுச்சி, உலக மக்களின் விடுதலைக்கு முன்னுதாரணமாக மிளிருமென நாம் நம்பலாம். ○

www.tamilarangam.net





முாதலாளித்துவ நாடாகச் சீரழிந்து போய் உள்ளது. மக்கள் தமது இரத்தத்தை சிந்தி போராடிப் பெற்ற உரி மைகள் படிப்படியாக பறிக்கப்பட்டு வருகி றது. இது உலகளவில் இன்று போராடிப் பெற்ற உரிமைகளை பறித்து விடும் ஒரு முதலாளித்துவ உலக ஒழுங்கின் வடிவமாகியுள்ளது. இது சீனாவுக்கும் பொருந்தும்.

இது ஒரு புறமிருக்க அ.மாக்ஸ், எஸ். வி ராஜதுவை, ,மனிதம் உயிர்ப்பு..... என எண்ணற்ற திரிபுவாத முதலாளித்துவ கோட்பாட்டு விற்பனர்கள் இன்னும் சீனா கமினிச நாடுதான் என தலையில் அடித்து சத்தியம் செய்கின்றனர். இவர்கள் மட்டும் இப்படி சொல்லி விடவில்லை, ஏகாதிபத்திய செய்தி ஊடகங்கள் முதற் கொண்டு எல்லா முதலாளித்துவ பிரிவுகளும் கூறுகின்றன. ஆனால் நடைமுறை புரட்சி வாதிகள் 1980 இன் ஆரம்பத்திலேயே சீனாவின் முதலா-ளித்துவ மீட்சியை திட்டவட்டமாக மா\ லெ\ மாவோ சிந்தனையின் வழிகளில் சுட்டிக்காட்டி நின்றனர்.

ஆனால் மாக்சிசத்தை திருத்துவதாகக் கூறும் திரிபுவாதிகள் மட்டும் இன்னமும் சீனா கமினிச நாடு என்கின்றனர். துரோகி டெங்கை உலகி லேயே ஓர் உன்னத மார்க்சிச வாதி என்கின்றனர். இது தான் அ.மாக்ஸ் போன்றோர் மார்க்சிசத்தை ஆய்வு செய்து கண்ட முடிவு. இது ஏகாதிபத்தியத்துடன் இணைந்து கூறும் அ. போன்றோரின் நோக்கம் சீனாவை மேலும் மேலும் ஏகாதிபத்தியத்துக்காக திறந்து விடுவதும், மார்க்சிசத்தை கொச்சைப்படுத்தி, திரித்து புரட்டுவதன் மூலம் புரட்சியை தடுத்துவிட விரும்பும் முதலாளித்துவ குள்ள நரிகளுக்கு சேவகம் செய்யும் நரித்தனத்துடன் கூடிய மார்க்சிச வி-ரோதச் செயலுமாகும்.

www.tamilarangam.net



# உணவுக் கலவரம்

உலகை ஒரு குடையின் கீழே ஆளும் ஏகாதிபத்திக் கனவுகளை நிறைவு செய்யும் உலக வங்கியானது அந்நாட்டு மானியங்களை அகற்றக் கோரியும், விலை அதிகரிப்பை அதிகரிக்கக் கோரியும் மூர்க்கமாகத் தொழில்பட்டு வருகின்றது.

இத் தொடர்ச்சியில் ஏகாதிபத்திய பொம்மை அரசு ஜோர்தானில் உள்ள 4 பேருக்கு ஒருவர் பெற்றுவந்த மானியத்தை நிறுத்தியது. இதனால் பாதிப்படைந்த 42 லட்சம் ஜோர்தானிய மக்களுக்கு விலைவாசியின் அதிகரிப்பு மேலும் பலத்த அடியைக் கொடுத்தது. 85 பில்ஸ்க்கு விற்கப்பட்ட பாண் திடீரென 220 பில்ஸ்சுக்கு உயர்ந்தது. இதைத் தொடர்ந்து கராக் நகரில் மூண்ட உணவுக்கலவரமானது தலைநகரம் அம்மன் வரை விரவிப் பரவியது.

உலகவங்கியிடம் கையேற்திப் பெற்ற 700 கோடி டிடாலர் (1995ல்) களுக்கு மேலான கடன்களுக்கு தாய்நாட்டை அடகுவைத்து, மக்களை அதற்காக வட்டி கட்ட அவர்களின் முதுகை அழுத்தும், அவர்களின் இரத்தத்தை வசூலாக திரட்டும் அரசு தன் சொந்த மக்களைப்பற்றி எப்பொழுதுமே கவலைப்படுவதுமில்லை. மாறாக அதன் கவலையெல்லாம் ஏகாதிபத்தியத்தை எப்படி பாதுகாப்பதென்றும், எப்படி எப்படியெல்லாம் ஏகாதிபத்தியக் கொள்ளைகளுக்கு நாட்டைத் திறந்துவிடலாம் என்பதன் ஊடாக, தனது மடிகளையும் இக் கொள்ளைப் பங்கால் நிரப்பிவிட நாயாய்ப் பேயாய் அலைகின்றனர்.

மக்கள் உணவின்றி பட்டினி தாங்காது கலவரத்தில் ஈடுபடுகின்றனர். அதைப் பங்கரவாதம், வன்முறை என கூக்குரலிட ஜோர்தான் அரசுமட்டுமல்ல உலகச் செய்தியமைப்புக்கள் எல்லாம் காத்துக்கிடக்கின்றன.



www.tamilarangam.net



# பிரெஞ்சு நாய், பூனைகள் செல்வத்தில் மிதக்க..

# மூன்றாம் உலக மனிதர்களோ பட்டினியால் கிடக்கின்றனர்!

உலகில் 100 கோடிக்கு மேற்பட்ட மக்கள் அடுத்த நேர உணவிற்கே வழியின்றி கையேந்துகின்ற போது, இவ்வறுமை காரணமாக 25 கோடி சிறுவர்கள் உழைப்பில் ஈடுபடுகின்றனர்.

இது உலகின் உன்னத சனநாயகத்தின் ஒரு பக்கமேயாகும் மறுபக்கம் பிரான்சில் மட்டும் வீட்டு வளர்ப்பு மிருகங்களின் எண்ணிக்கை 4 கோடியைத் தாண்டுகிறது இது ஆடு,மாடுகளை உள்ளடக்கியது அல்ல. எந்த நடைமுறை பிரயோசனமும் அற்ற, தமது பொழுது போக்குக்காக, மிதமிஞ்சிய தமது செல்வத்தைக் கரைக்க பொக்கிசங்களாக வளர்க்கப் படுபவையே இவை.

இந்த வகையில் பிரஞ்சில் வளரும் நாய், பூனைகளை ஆய்விற்கு எடுப்பின் இங்கு 80 லட்சம் பூனைகளையும், 76 லட்சம் நாய்களையும் காணலாம். இந்த நாய் வளர்ப்புக்கான வருடாந்த மொத்த செலவு 29,600 கோடி இலங்கை ருபாய்களாகும். பூனைகளின் வருடாந்த மொத்த செலவோ 18,000 கோடி இலங்கை ருபாய்களாகும். மொத்த நாய், பூனைகளின் வருடாந்த அன்னியமாய் செலவோ 47,700 கோடி இலங்கை ருபாய்களாகும்.





ஒரு வருடத்தில் பிரான்சில் நாய், பூனைகளுக்கென அனியாயமாகும் பணம், பொருளின் மொத்தத் தொகை 47,700 கோடி இலங்கை ருபாய்களாகும். இதைவிட 214 லட்சம்மீன்கள், 57 லட்சம் பறவைகள், 15 லட்சம் சிறு மிருகங்கள் என இத்தொகை மேலும் விரிந்து செல்கிறது. செல்வத்தில் மிதக்கும் பிரான்சில் நாய், பூனையின் தலா வருட சராசரி செலவு 8 00,442 டொலர்களும்

ஒரு நாயின் ஒரு வருட செலவான 800 டொலரை விடக்குறைவாக தலாவருமானத்தைக் கொண்ட நாடுகளின் எண்ணிக்கையோ 70 ஆகும் இங்கு வாழும் மக்களின் தொகை 342 கோடியாகும் இது உலக சனத்தொகையின் 61 வீதமாகும். செல்வத்தில் உள்ள பிரஞ்சு பூனையின் வருட தலா செலவு 442 டொலர் ஆகும். இந்த 442 டொலரை விட குறைவான தலா வருமானத்தை உடைய நாடுகள் 29 ஆகும் இதன் மக்கட் தொகை 163 கோடியாகும். இது உலக சனத்தொகையில் 29 வீதமாகும்.


மொத்தமாக நாய், பூனையின் வருட செலவான 954 கோடி டொலர்களை விடக் குறைவான வருமானத்தை உடைய நாடுகள் 142 ஆகும். இதை தட்டிக் கேட்காத இந்த உலக ஒழுங்குதான் இன்றுள்ள உன்னத சனந

www.tamilarangam.net



# பிரிட்டிஸ் பாராளுமன்றத்தில் உள்துறை அமைச்சரின் பொய்!

பிரிட்டிஸ் பாராளமன்றத்தில் வீதிகளில் வசித்துவரும் வீதிப்பிச்சைக்காரர் பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு: அப்படி யாரும் பிச்சையெடுப்போர் இல்லை என பிரிட்டிஸ் உள்துறை அமைச்சர் பதிலளித்துள்ளார்.



பிரிட்டிஸ்ஸில் என்ன நடக்கிறது என்றே தெரியாத மேட்டுக்குடி அமைச்சர், ஏழை எளியவர்களை எந்தக் பெறுமானமும் அற்ற ஜடங்களாகக் கருதியே, வேண்டா வெறுப்பாக இப்படிப் பதிலளித்துள்ளார். இதன்பின் எழுந்த எதிர்பலைகளால் உள்துறை அமைச்சு பிரிட்டிசில் பிச்சைக்காரர்கள் இல்லை, அவர்கள் ஸ்கொட்லாண்டைச் சேர்ந்தவர்கள் என ஒரு 'திறில்' பிரகடனத்தைச் செய்தர்.

உண்மையில் சிலலட்சம் பிரிட்டிஸ் வீதிப்பிச்சைகாரர் உள்ளதுடன், அண்மைய குளிரில் 10 மேற்பட்டோர் விறைத்து இறந்துபோனதும், இந்த குளிர் ஐரோப்பாவில் 200 மேற்பட்ட வீதிப்பிச்சைக்காரரைப் பலிகொண்டது என்பதும் நிதர்சன உண்மைகளாகும். இப்படி இருக்க இந்த அமைச்சருக்கு இப்படிப் பொறுப்பற்றுப் பதில் அளிக்கும் மண்டைக்கனம் எங்கிருந்து வந்தது.! இவர்களைச் சொல்லிக் குற்றமில்லை, இன்றைய அரசயந்திரக் கதிரைகளின் சொகுசுப் பலம் அவர்களை இப்படித் திமிராகப் பேசவைக்கிறது.

---

நாயகமாம்! ஓர் இலங்கையன் வருடம் பெறும் சராசரி வருமானம் 650 டொலராகும். இவன் ஒரு நாயை விட 1.23 மடங்கு குறைவாகவும், ஒரு பூனையை விட 1.47 மடங்கு அதிகமாகவும் வாழ்கின்றான். உலகில் அதி குறைந்த வருமானத்தைப் பெறும் சைரியன், மொசம்பிக்காரன் ஒரு வருடம் பெறுவது 120 டொலராகும். இவன் ஒரு நாயை விட 6.66மடங்கு குறைவாகவும், ஒரு பூனையை விட3.68 மடங்கு குறைவாகவும் வாழ்கிறான்

இலங்கை மொசம்பிக் என அனைத்து நாட்டிலும் கிடைக்கும் சராசரி எல்லா மனிதனுக்கும் கிடைப்பததில்லை. அது சூறையாடப்பட்டு, பின் கிடைப்பது என்னவோ பிரஞ்சு நாய் விட்டுச் செல்லும் எலும்புத் துண்டுகளே! இந்த வாழ்க்கையை சனநாயகம் என நம்ப வைக்கப்படுகிறது. இந்த நாயினும் கீழான வாழ்க்கை வாழ்வது எமக்குத் தேவைதானா? அல்லது இதை மாற்றி எழுத நாம் நித்திரை விட்டு எழும்பப் போகிறோமா, இல்லையா? சொல்லுங்கள்.

www.tamilarangam.net





மகனின் விடுதலையைக் கோரும் ஒலிம்பிக் குற்றவாளியின் தாய்

# உலக பொலிஸ்காரன் - அமெரிக்காவின் ஜனநாயகத்தை பாதுகாக்கும் செப்பிடு வித்தை!

அண்மைய ஒலிம்பிக் போட்டியில் வெடித்த குண்டுவெடிப்பைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனநாயகப் பொலிஸ் ஒருவரைக் கைதுசெய்து குற்றவாளியாக இனம்காட்டியது.

ஊருலகமோ அமெரிக்க இரகசியப் பொலிஸின் செயற்படும் தன்மையைக் கண்டு மூக்கில் விரலை வைத்தது ஆச்சரியப்பட்டது. ஆனால் குற்றவாளியாக்கப்பட்ட நபரும், அவரின் தாயாரும், மனித உரிமைவாதிகளும் தீவிரமாகப் போராடியதன் பின் அவர் குற்றமற்றவர் என குற்றவாளிகளைக் கொண்ட பொலீஸ் ஒப்புக் கொண்டதுடன், அவருக்கு நஸ்டஈடு வழங்கவும் முன்வந்துள்ளது.

ஓர் அப்பாவியை குற்றவாளியாக்கிய பொறுப்பற்ற அமெரிக்கப் பொலீஸ் உலகின் ஜனநாயகவாதியாகத் தொடர்ந்தும் உள்ளது. அமெரிக்க பொலிஸ் ஜனநாயம் என்பது குற்றவாளிகளைப் பாதுகாப்பதும், அப்பாவிகளை குற்றவாளி ஆக்குவதுமேயாகும்.

அகதியின் குரல்
VOICE OF
REFUGEES

MR. NAZIR ATAF
P.boks 10
5125 bøvågen
Norway

www.tamilarangam.net



# அல்பானிய கிளர்ச்சி என்பது,



ஐரோப்பாவின் மையத்தில் உள்ள மிக வறுமையான ஒரு நாடு அல்போனியா. 2ம் உலக யுத்தத்தின் பின் கமினிசத்தை தனது கோட்பாடாக வரிந்து கொண்டபின், 60களில் குருசோவின் திரிபுவாத கோட்ப்பாட்டை எதிர்த்து சீனாவுடன் அணிதிரண்டது. 70 களில் மாவோவின் மரணத்தைத் தொடர்ந்து அல்போனியாவும் திரிபுக்குள் சென்றது.

1990 களில் அப்பட்டமான சனநாயக முதலாளித்துவத்தை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, சொத்துக்கள் தனியாருக்கு தாரைவார்க்கப்பட்டது. இதன் தொடர்ச்சியில் தனியார் சேமிப்பை ஊக்குவித்த அரசானது, கட்டுப்பாடு அற்ற உலகவங்கின் நிபந்தனைகளை ஏற்று பணத்தை வெளிநாடுகளுக்குக் கடத்த அனுமதியளித்தது. இதனால் பணம் காணாமல் போனதுடன், அனைத்து சேமிப்புப் பணமும் இல்லை என கைவிரித்து விட்டது அரசு. இதனால் அல்போனியாவில் வசிக்கும் மூன்றில் ஒரு பங்குமக்கள் பாதிக்கப்பட்டதுடன், வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கினர்.

www.tamilarangam.net




# முதலாளித்துவ ஜனநாயகத்தின் தோல்வியே!

இதை சிகப்பு பயங்கரவாதம் என அரசு பூசாண்டி காட்டி, மக்களின் பணக் கொள்ளையை சனநாயகம் என பீற்றியது. பணத்தைக் கொள்ளையடித்த மேட்டுக் குடி நாட்டை விட்டுத் தப்பி ஓட உதவியதுடன், மேற்கு நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் தப்ப முடியாதவர்களை இராணுவத்தை அனுப்பி மீட்டது. மக்களின் கிளர்ச்சியை அடக்க இராணுவ சட்டம், ஊரடங்கு என இனைத்து அடக்கு முறையையும் ஏவிய அரசானது, பல பொய்யான அவதூறுகளை பரப்பிவிடவும் தவறவில்லை.

மக்கள் மீதான சனநாயக பயங்கரவாதத்தை எதிர்க்க மக்கள் ஆயுதக் கிடங்குகளை சூறையாடி, ஆயுதபானியானார்கள்.



## TWA விமான விபத்தும் மூடிமறைக்கப்படும் சதிகளும்




அண்மையில் TWA விமான விபத்தைத் தொடர்ந்து, பயங்கரவாதம் பற்றி மீள ஒருமுறை மக்களுக்கு புகட்டப் பட்டது. பல புனைகதைகள், பல குழுக்களை வேண்டுமென்றே சந்திக்கு இழுப்பது போன்ற கீழ்த்தனமான வேலைகளால் அவர்களின் பின்னிருந்த நியாயமான போராட்டங்கள் கொச்சைப் படுத்தப் பட்டன. இவ் விபத்தின் பின்னணியில் அமெரிக்க இராணுவ ஏவுகணைகளின் பரீட்சிப்புக் காரணமாக இருக்கலாமென பல தகவல்கள் வெளி வந்துள்ளது.

⇨

www.tamilarangam.net



இராணுவம், பொலீசு தனது இடங்களில் இருந்து ஓட்டம் பிடித்ததுடன், பலர் கிளர்ச்சிக்காரர்களுடன் இணைந்தும் கொண்டனர். சிறு ஆயுதங்கள் முதற் கொண்டு கனரக ஆயுதங்களுடனான போர், விமானங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் போன்றவற்றைச் செய்துவந்த கிளர்ச்சிக்காரர்கள் மீது சிகப்பு "பயங்கர வாதிகள்" என்று அரசு செய்த பொய்யான பிரச்சாரமும் பொய்துப் போனது.

பாராளுமன்ற சனநாயகத்தின் தோல்வியை மறைக்க கையாண்ட பிரச்சாரம் தோல்வி பெற்றதும்:, முன்னாள் கமினிச போலிகள் ஓடேடி வந்து அரசுக்கு



கொல்லப்பட்ட அல்போனியர் ஒருவரின் சவ ஊர்வலத்தின் பொழுது....

இதற்கு பல ஆதாரங்களைக் கூட வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்க அரசோ கைகளைப் பிசைந்த படி தொடர்ந்தும் மறுத்துக் கொண்டிருப்ப தற்கு வேறுபல ஊகங்களை தொடர்ந் தும் முன்ன தள்ள வேண்டியிருந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால் தொழில் நுட்பக் கோளாறுதான் இதற்குக் காரணமென ஒரு புளுகுமூட்டையை அவிட்டு விட்டனர். இந்நிலையில் போட்டி ஏகாதிபத்தியம் - பிரான்ஸ் சுதந்திர விசாரனைக்குழு ஒன்றை அமைத்துள்ளது.

குண்டு வெடிப்புக்கள், தகர்ப்புக்கள் எல்லாமே எதிரியால் ஆனவை அல்ல. சொந்தத்தில் செய்து மற்றவர்கள் மீது பழிசுமத்துவது ஏகாதிபத்தியத்துக்கு கைவந்த கலையாகும். இது ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பதைப் போல- முன்பு இதுபோன்ற மர்ம விமான விபத்துக்களின் பின்னால் ஏகாதிபத்தி யச் சதிகளும், பரீட் சார்த்த முயற்சிக ளுமென நிறையவே இருந்திருக்கின்றனவே.

www.tamilarangam.net



முண்டுகொடுத்து நின்றனர். கமினிச கட்சியை சோசலிச கட்சியாக மாற்றிய இந்த போலி சனநாயக வாதிகள் இன்று ஆட்சியை ஏற்றுள்ள அதேவேளை, கொள்ளையடித்த சனாதிபதியை பாதுகாக்க திடசங்கப்பம் கொண்டுள்ளனர்.

மறுபுறம் கிளர்ச்சி செய்த மக்களோ ஓர் உறுதியான தலைமை இன்றியும், பல்வேறு குழுக்களாகவும், தன்னியல்பான கிளர்ச்சி யிலும் சிக்கி திணறுகின்றனர். ஐரோப்பா பொலீசுப் படையை அனுப்பி, கொள்ளைக்கு சாதகமான சனதிபதி அரசை பாதுகாக்கும் படி பிரகடனம் செய்துள்ளது. இதை மனி தானிமான உதவி, தலையீடு எனக்கூறி ஐரோப்பிய மையத்துக்குள் கமினிச பூதம் பூந்துவிடுவதைத் தடுக்க ஏற்பாடுகள் என ஒப்புவித்துக் கொண்டதுடன், சதிகள், மக்கள் பாதுகாப்பு என பல வழிகளில் ஏகாதிபத்தியம் முனைப்புப் பெற்றுள்ளது. இன்று உலகம் ஒற்றைப் பொருளாதார சூறையாடல், எந்தவிதமான கேள்விக்கு இடமின்றி மற்றைய நாடுகளுக்குள் படை-களை அனுப்பி, மக்களை ஒடுக்குவதைக் காணமுடிகிறது. இதை அல்போனிய மக்கள் மா-லெ பாதையில் இணிதிரள்வதன் மூலம் தடுக்க முடியும் என்பதை வெகுவிரைவில் வந்தடைவர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

## ருமேனிய மக்கள் இன்று

முன்னாள் கமினிச நாடும் இன்னாள் முதலா-ளித்துவ நாடுமான ருமேனியா 1990களில் திறந்த முதலாளித்துவத்துக்குள் காலடி எடுத்து வைத்தது. 2 கோடியே 7 லட்சம் மக்களைக் கொண்ட ருமேனியா 94ல் 543 கோடி டொலரை அன்னிய கடனாகக் கொண்டிருந்தது.

ஓரளவு மேல்மட்ட உயர்பிரிவு இன்று 12,00,000 லியியை (200 டொலர்) மாத வருமானமாகக் கொண்டிருக்க, ஒரு மத்திய தர தொழிலாளி பெறுவது என்னவோ 4,00,000 லியிதான் (67 டொலர்). இது இப்படியிருக்க கீழ்மட்ட ஏழைகளின் பாடு பிச்சை எடுப்பதைத் தவிர வேறில்லை.

இதை ஏற்படுத்தியது சனநாயகம் தான். பெரிதாக ஏதோ சனநாயகம் என புத்திஜீவிகளும், மீடியாக்களும் பேசுகின்றனரே இதைப்பற்றி நாம் என்ன சொல்லப் போகிே-றாம்?

## மரணதண்டனை விதிக்கப்பட்ட தென்கொரிய ஜனாதிபதிகள் விடுதலையை நோக்கி

தென்கொரிய மக்களைச் சூறையாடியும், கொள்ளையடித்தும், படுகொலை செய்தும் அமெரிக்காவின் கையாளாகஇருந்த இரு தென்கொரிய ஜனாதி பதிகள் குற்றவாளிக ளாக இனம் கண்டு நீண்ட சிறையும், மரணதண்டனையும் விதிக்கப்பட்டனர். இருந்தபோதும் இவர்களை விசேட மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய அமெரிக்காவின் பொம்மையான தென்கொரிய அரசு முன்வந்துள்ளது.

ஊழல், கிரிமினல், கொள்ளை, படுகொலை-யெனத் தொடரும் இந்தப் பாராளுமன்ற அரசியல் அவர்கள் சார்பானதே ஒழிய, உழைக்கும் மக்கள் சார்பானது அல்ல என்பதற்கு தென்கொரிய ஓர் எடுத்துக்காட்டு. இவர்களுக்குத்

www.tamilarangam.net



# முன்னாள் சோவியத் யூனியனும்,

முன்னாள் சோவியத்தில் இருந்து உருவான முதலாத்துவ நாடுகளைப் பற்றி புள்ளி விபர ரீதியாக ஆய்வு செய்கிறது இக் கட்டுரை. முன்னாள் சேவியத் யூனியன் நாடுகளின் படு மேசமான சமூக நெருக்கடியை ஆய்வு செய்வதுடன், இந்நாடுகளின் பொருளாதார கீழ் நோக்கிய சரிவுகளையும் ஆய்வு செய்கிறது.

வரலாறு பின் நோக்கிச் செல்வதில்லை என்ற ஆழ்ந்த பாரிய உண்மையை நாம் கவனத்தில் எடுப்பின், சோவியத்தில் உருவான நாடுகளில் ஏற்பட்டு வரும் கொருளாதார சமூக நெருக்கடி, வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு வீரியம் பெற்றுள்ளது.

இதை தடுத்து நிறுத்த இந்த உலக ஒழுங்குக்குள்ளோ, வேறொரு மாற்று வழியும் இன்றி இந்த சனநாயக முதலாளித்துவம் அழுகி நாறுகிறது. முன்னாள் சோவியத்தை எடுப்பின் 1917 களில் புரட்சிக்கு பின் இரு தடவை உலகளவில் யுத்தத்தை சந்தித்ததுடன், பாரிய பொருளாதார இழப்பையும், மக்கள் இழப்பையும் சந்தித்தது. உலகளவில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்ட போது சோவியத் அதை மீறியது. லெனின், ஸ்ராலின் காலத்துக்குப் பின் முதலாளித்துவ மீட்சியை தெடக்கி வைத்த குருசேவும், முடித்து வைத்த கொப்பசோவும் சோவியத் சமூகத்தின் வளர்ச்சியை கட்டுப்படுத்தி, ஏகாதிபத்திய உலகுக்கு விபச்சாரம் செய்ய அழைத்ததுடன், தாமும் மற்றைய நாடுகளில் விபச்சாரம் செய்யத் தொடங்கினர்.

ஸ்ராலின்காலம் வரை நீடித்த கமினிசமும், அதற்குப் பிந்திய முதலாளித்துவ மீட்சியும் சோவியத் மக்களின் சமூக வாழ்க்கையில் வெவவேறு காலகட்டத்தை பிரதிபலித்தது. இக்காலத்தில் ஒரு மனிதனுக்கான வீடு, உணவு, உடை என அனைத்து

---

தண்டனை வழங்கின் மக்கள் நீதிமன்றங்கள் தேவை. அதை உருவாக்க மக்கள் ஆட்சியைக் கைப்பற்று வது முன் நிபந்தனையாக உலகளவில் உள்ளது.

## ஆந்திராவில் எழும் புரட்சி

ஆந்திர ஏழை, எளிய மக்களின் துன்பங்களைத் துடைக்க எழுந்த இயக்கமான மக்கள் யுத்தக்குழு, மிக வேகமாக எழுச்சிபெற்று வருவது யாவரும் அறிந்ததே.

ஒரு பறம் நிலப் பிரபுக்களின் சுரண்டலையும், மறுபுறம் தரகு முதலாளிகளின் சுரண்டலையும் தம் வாழ்க்கையாக எதிர்கொண்ட மக்கள், அச்சுரண்டலைப் பூண்டோடு ஒழித்துக்கட்ட கிராமம் கிராமமாகவும், காடுகளை அண்டிய பொரும் பிரதேசங்களிலும் அணி-

www.tamilarangam.net



அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்த சமூகம் பின்னால் அதை இழந்து போய்யுள்ளது.

இன்று மக்கள் தமது கடந்தகால வெற்றிகளைத் தேடி வீதியில் இறங்கியுள்ளனர். உலக முதலாளித்துவம், திரிபுவாதம், நவீனமார்க்சிய வாதம் என அனைத்துத் தரப்பு சேறடிப்புக்களையும் மீறி மக்கள் தமது உண்மையான தலைவர்களை இனம் கண்டுள்ளனர்.





கடந்த 70 வருட ஆட்சியை மறுபடியும் பார்த்த மக்கள் அதில் லெனின், ஸ்ராலின் காலத்தை சரியாக இனம் கண்டு அவர்களின் கோட்பாடுகளையும், படங்களுடன் நாள்தோறும் வீதியில் இறங்கி போராடத் தொடங்கி விட்டனர். எந்தப் புள்ளியில் புரட்சியைக் கைவிட்டனரோ அதே இடத்திலிருந்து தொடர உறுதிபூண்ட மக்கள், எல்லாவித சேறடிப்புக்களையும் மீறி தம்மை அடையாளப் படுத்துத்துகின்றனர்.

உலக சனத்தொகையில் 6 வதாக உள்ள சேவியத் உலக தேசிய வருமானத்தில் 13 வது இடத்தில் உள்ளது. 1950 ல் உலக வருமானத்தில் இரண்டாவது இடத்தை பிடித்த ருசியா இன்று மோசமான நிலைக்குச் சென்றுள்ளது. தலா வருமானத்தை எடுப்பின் இன்று 102 இடத்திலுள்ள ருசியா இன்னமும் ஒரு வறிய நாடல்ல. உலக தலாவருமானம் 1995ல் 5,000 டொலராக இருக்கும் நிலையில் முன்னாள் சோவியத் இதை மிஞ்சி நிற் றது. உலகில் இன்று இராண்டாவது பொரிய இராணுவத்தை கொண்டுள்ள ருசியா, உலகைப் பங்கிட்டுக் கொள்ளையடிக்கத் துடிக்கிறது.

இன்று 16 நாடுகளாகப் பிரிந்துள்ள

அணியாகத் திரண்டு ஒருபொரும் தளப்பிரதேசத்தையே உருவாக்கியுள்ளனர்.

அண்மையில் பொலிஸ் பயங்கர வாதத்தை எதிர்க்கும் வகையில் ஒரு பொலீஸ் நிலையத்தைத் தாக்கினர். இதில் 17 பொலீசார் கொல்லப் பட்டதுடன், 34 ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்ற மக்கள் யுத்தக் குழுவின் வளர்ச்சி, இந்திய ஊழல் அதிகார சீரழிவு அரசுக்கு கிலியை ஏற்படுத்தியுள்ளது. இந்திய உழைக்கும் மக்களின் நம்பிக்கை ஒளியாக மக்கள் யுத்தக்குழு பிரகாசித்து வருகிறது.

## தமிழ் மாணவர் கல்விக்கு வேட்டு!

முற்போக்கு ( ? ) ஜனநாயகத்தின் மோசடி அரசான சந்திரிகா அரசோ, இலங்கையில் அரசு சார்பு தொழில்களில் ஈடுபடுவோரை குறைத்துவிடக் கோரி, சர்வதேச நிதி நிறுவனங்களின் ஆலோசனையின் பேரில் ஒரு மாபெரும்

www.tamilarangam.net



முன்னாள் சோவியத் இன்று தமக்கிடையில் ஒரு கூட்டைக் கொண்டுள்ளது.

ருசியாவில் உள்ள சுரங்கத் தொழிலாளர், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், இராணுவம் என பல துறைக்கு கடந்த 5 வருடங்கள் முதல் பல்வேறு அளவுகளில் சம்பளம் வழங்கப்படவில்லை. இதன் தொகை 1,500 கோடி டொலருக்கும் அதிகமாகும். இன்று பல இடங்களில் உற்பத்திப் பொருட்களை மீளச்சம்பளமாக வழங்கும் நிலைக்குள் சென்றுள்ளது. இராணுவத்தினர் தமது ஆயுதங்களையே விற்கின்றனர்.

பல்வேறு உற்பத்திப் பொருட்கள், உற்பத்தி முடங்கி ஒன்றை ஒன்று முடக்குகின்றது. பணவீக்கம் உச்சநிலைக்கு சென்றுள்ளது. கொப்பசோவின் இறுதிக் காலத்தில் ஒரு டொலர் 4 ரூபிள்களாக இருந்தது. இது'97 ல் 6,110 ரூபிள்களாக மாறியுள்ளது. 96 ல் 5,600 ரூபிள்களாக இருந்தது. பொருட்களின் விலை 1991 ஐ விட 92ல் 13 53 வீதத்தால் அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்தமாக பணவீக்கம், விலை அதிகரிப்பு, சம்பள குறைவு, சம்பளமின்மை, வேலையின்மை... என அனைத்தும் சோவியத் சமூகத்தை கீழ்நோக்கி தள்ளிச் செல்கிறது. மக்கள் தமது கைகளில் இருந்ததை இழந்து போய்விட்ட உண்மையை தமது கண்முன்னேயே பார்க்கின்றனர்.

உதாரணமாக:- சோவியத்தின் 1950 களிலான தேசிய வருமானத்தை எடுப்பின் 1990 டொலர் பெறுமதியில் 51,000 கோடியாகும். இது அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் இருந்தது. அமெரிக்கா 1,45,700 கோடி டொலரை அன்று பெற்றிருந்தது. இன்று அவ்வாறில்லை. 1995ல் பிரிந்து சென்ற நாடுகளின் ஒட்டுமொத்த தேசிய வருமானம் 55,564 கோடி டொலர்களாக, 1995 ஆண்டின் பெறுமதியில் இருந்தது. இன்று இதை 50 களுடன் ஒப்பிட்டு நோக்கின் கிட்டத்தட்ட சமமாக உள்ளது. வளர்ச்சி என்பது பூச்சியமாக உள்ளது. இதே நேரத்தில் அமெரிக்காவின் தேசிய வருமானம் 6,98,200 கோடி டொலர்களாக 95ம் ஆண்டின் பெறுமதிப்படி உள்ளது.



மோசடி யை உலகெங்கும் இல்லாத வகையில் அறிவித்து வருகின்றது.

இது தமிழ்மக்களை குறிவைத்துத் தாக்குவதாக அமைந்தது என்பதால், இது சிங்கள இன வாதிகளின் வாய்க்கு அவல் கிடைத்து விட்டதைப் போல் ஓர் இனிப்பான செய்தி யுமாகும்.

குறிப்பிட்ட காலம் வேலை செய்து இருந்தால் அந்நபர் ஓய்வு பெற முடியும் என்ற அறிவித்தலைத் தொடர்ந்து 30,000 அரசு துறையைச் சார்ந்தோர் தமது விண்ணப்பங்களை அவசரமாகச் சமர்ப்பித் துள்ளனர். இதில் தமிழ் ஆசிரியர்கள் 10,000 பேர் என்பது அதிர்ச்சி யான விடயம். இன்று வடக்குக் கிழக்கில் புலி மற்றும் இராணுவத்தின் பிடிக்குள் சிக்கியுள்ள இளம் சமுதாயமும், ஆசிரியர் சமூகமும் ⇨

www.tamilarangam.net



1950களில் ருசிய தேசிய வருமானம் அமெரிக்காவை விட ஒன்றரை மடங்கு கீழ்நிலையில் இருந்தது. இது இன்று 12.5 மடங்கு கீழ்நிலைக்குப் போய்யுள்ளது. உலகமோ ஒருபுறத்தில் வேகமாக மாறிச் செல்கிறது. மறுபுறம் முன்னாள் சோவியத் நாடுகள் மேலும் கீழ்நோக்கிச் செல்கிறது. இதை புள்ளி விபரங்களுடன் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

| ஆண்டு | தேசிய வருமானம் டொலரில் |
|---|---|
| 1950 | 51,000 |
| 1983 | 1,27,867 |
| 1986 | 1,77,800 |
| 1989 | 2,42,037 |
| 1995 | 55,564 |

தேசிய வருமானம் கோடி டொலரில்

| தனிநபர் ஆண்டுவருமானம் டொலரில் | |
|---|---|
| 1950 | 2,850 |
| 1983 | 4,701 |
| 1986 | 6,350 |
| 1989 | 8,375 |
| 1995 | 1,922 |

முன்னாள் சோவியத் நாடுகளின் அளவில்.

தேசிய வருமானம், தலா வருமான வீழ்ச்சி முன்னைய சோவியத்துக்கும், இன்றைய முன்னாள் நாடுகளுக்கும் இடையில் தெளிவாக வேறுபாடு உள்ளது. 1986 ல் அமெரிக்காவின் தலா வருமானம் 14,490 டொலராக இருக்க ருசியாவின் தலா வருமானம் 6,350 டொலர்களாகவே இருந்தது அதாவது இரண்டு மடங்குகளுக்கு சற்று அதிகம். ஆனால் 1995ல் அமெரிக்காவின் தலா தேசிய வருமானம் 26,540 டொலர்கள். முன்னாள் சோவியத்தின் தலா வருமானம்

மிகக் கடின நிலையிலேயே அடுத்த சந்ததியினரை உருவாக்குகின்றனர். இதற்கு வேட்டுவைக்கும் நோக்கில் உள்ளது இந்த ஆசிரியர்களின் விண்ணப்பம்.

இன்று 43 தமிழ் மாணவருக்கு ஒரு தமிழ் ஆசிரியர் இருக்க, 21 சிங்கள மாணவர்களுக்கு ஓர் சிங்கள ஆசிரியர் என்ற விகிதத்தில், இனவாதம் மேலும் தமிழ் கல்விக்கு வேட்டுவைக்க உள்ளது இந்த ஒய்வு விண்ணப்பத்தால். இந்த நிலைமை என்பது நிரப்பப்பட முடியாத ஒரு நீண்ட வெற்றிடத்தை ஏற்படுத்தி, ஓர் இன அழிவை நாசுக்காக கல்விமூலம் ஏற்படுத்தும் என்பதை யாரும் மறுக்கவே முடியாத நிதர்சன உண்மையாகும். ○

## நீதியின் சின்னமாம் பொலீஸ், ஆனால் சிறைகளிலோ படு கொலைகள்


உலக ஜனநாயக நீதியை ⇨

www.tamilarangam.net



பாதுகாப்பது பொலீஸ் என மகுடம் சூடியவர்கள் மக்களையே அடக்குவதைப் பற்றிய ஆதாரம் மேலும் தேவைதானா?

இந்தியா முழுவதும் பொலீஸ் கெடுபிடி சித்திரவதைகளால் படுகொலை செய்யப பட்ட அப்பாவி மக்களின் பட்டியலோ நீண்டு



கொண்டு போகின்றது. 1994-95ல் 65 பேர், இதைவிடச் சிறைச் சாலையில் 34 பேர். 1995-96ல் பொலீஸ் கஸ்ரடியில் படுகொலை செய்யப்பட்டோர் 105 ஆக உயர, சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்டோர் 207 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 10,195 மனித உரிமை மீறல்கள் செய்யப்பட்டதாக புகார் வந்துள்ளது. புகாருக்கு வராததைக் கணக்கிட்டால் பல லட்சங்களை அது தாண்டுமென நம்பப் படுகின்றது. பொலீசு என்பது ⇨

1,922 டொலர். அதாவது 14 மடங்கு கீழாக வீழ்ச்சி காண்டுள்ளது. முன்னாள் சோவியத்தில் இருந்த தேசிய தலா வருமான வளர்ச்சி முதலாளித்துவத்தில் வீழ்ச்சி கண்டதுடன், தேசிய வருமானம் வெள்ளமாக மற்றைய ஏகாதிபத்தியத்துக்குள் பாய்ந்து செல்கிறது. நாம் இனி தனியாக இன்றைய ருசியாவை எடுத்து ஆய்வு செய்வோம்.

| ஆண்டு | ***கோடி டொலர்*** |
|---|---:|
| 1992 | ***50,000*** |
| 1993 | ***44,700*** |
| 1994 | ***39,249*** |
| **1995** | ***38,500*** |

தேசிய வருமானத்தை எடுத்துக் கொள்ளின் அப்பட்டமான முதலாளித்துவ மீட்சியின் பின்னர் தேசிய இழப்பு என்பது நிறுத்தமுடியாத வகையில் வேகமாக சரிந்து செல்கிறது. பணம் கொள்ளையடிப்பு வெளிநாடுகளுக்குக் கடத்தல் என்பது ஒரு சனநாயகப் பண்பாக அங்கீகரிக்கப்பட்டபின், ருசியப் பொருளாதாரம் தேக்கத்துக்கு உள்ளாகி, மக்கள் தமது வாழ்க்கையை இழக்கின்றனர். இதைத் துல்லியமாக தனநபர் வருமானத்தைக் கொண்டு பார்த்தால்

| ஆண்டு | ***கோடி டொலரில்*** |
|---|---:|
| 1983 | ***4,700*** |
| 1986 | ***6,350*** |
| 1987 | ***7,000*** |
| 1989 | ***8,375*** |
| 1991 | ***3,220*** |
| 1992 | ***3,400*** |
| 1993 | ***3,000*** |
| 1994 | ***2,650*** |
| **1995** | ***2,600*** |

www.tamilarangam.net



# பின்னாள் முதலாளித்துவ மீட்சியும்,

தேசிய தனிநபர் வருமானம் சோவியத் மக்களின் தனிநபர் வாழ்வு வீழ்ச்சியை துல்லியமாக்குகின்றது. சனநாயக பொருளாதார சுதந்திரக் கொள்ளையடிப் புக்கு அப்பட்டமாக திறந்துவிட முன்னிருந்த அன்றைய டொலர் பெறுமதியில் வாழ்ந்த வாழ்க்கை இன்று 1984 ஐ விட மூன்று மடங்கு கீழிறங்கியுள்ளது. 1989ல் ஒரு தனி மனித வாழ்க்கைக்கான அடிப்படை வருமானம் இன்று மூன்றில் ஒன்றாக குறைந்துள்ளது. அத்துடன் 89 களில் ஓரளவுக்கு கமினிசத்தின் எச்சசொச்சமாக இருந்த பங்கீடு இன்று இல்லாத நிலை. இன்று கிடைக்கும் மூன்றில் ஒன்று கூட கிடைக்காத ஒரு பெரும் பிரிவை உருவாக்கியுள்ளது. இன்று சோவியத் சமூகம் 89 ஐ விட, இரண்டு பெரும் பிரிவுக-ளாக பிளவுபட்டுள்ளது. இத்துடன் மிகப் பெரிய கடன் சுமையை மக்கள் மீது திணித்துள்ளனர். இதை ஆராயின்

| ஆண்டு | கோடி டொல-ர்களில் |
|---|---|
| 1990 | 6,100 |
| 1991 | 7,860 |
| 1992 | 8,310 |
| 1993 | 9,280 |
| 1994 | 11,280 |

உலக நாடுகளில் வெளிநாட்டுக் கடன் 1,48,900 கோடி டொலர்களாக இருக்க ருசி-யாவின் வெளிநாட்டுக் கடன் 11,280 கோடி டொலர்களாக உள்ளது. இது உள்நாட்டுக் கடனை உள்ளடக்கியதல்ல. உலக மொத்தக் கடனில் பதின் மூன்றில் ஒரு பகுதியைக் கொண்டுள்ள ரசியா முதலா-ளித்துவ மீட்சிக்கு முன் இந்தளவுக்கு இருந்ததில்லை. 1990 க்கும் 94 இடையிலான நான்கு வருடத்தில் இரட்டிப்பு மடங்காக அதிகரித்துள்ள வெளிநாட்டுக் கடன் 1997 ல் மேலும் அதிகரித்திருக்கும்.

மக்களை அடித்து உதைக்கவும், ஊழல் கொள்ளையடிப்போரை பாதுகாப்பதற்கே என்பதற்கு தேசிய மனித உரிமைச் சங்கத்தின் (NHRC) இன் அறிக்கை ஒரு நல்ல சாட்சியாகும். ○

**ஒப்பந்தங்கள் மக்களுக்கானது அல்ல மாறாக சில பிரிவுகளுக்கானது**



உலகளவில் எழுந்து வரும் போராட்டங்களை விலைக்கு வாங்குவது, அல்லது சீர்திருத்தங்கள் மூலம் சரிக்கட்டுவது என்பவை எல்லாம் ஏகாதிபத்தியங்களுக்கு கைவந்த கலையாகும்.

உலகில் மிக ⇨

www.tamilarangam.net



நீண்ட கொரிலா யுத்தத்தை செய்து வந்த குவத்த மாலா இடதுசாரி போராளிகளுடன் 1996 மார்கழியில் ஐ.நா சபை தலைமையில் ஓர் உடன்பாடு எட்டப்பட்டது. உலகில் அதிகளவு சனத்தொகையின் அடிப்படையில் இழப்பை ஏற்படுத்திய இப் போராட்டம் 2 லட்சம் பேரை இதுவரை காவு கொண்டுள்ளது. இதில் 50,000 பேர்வரை காணமற் போயுள்ளனர்.

ஒருகோடி சனத்தொகையைக் கொண்ட குவத்தமாலாவின் தனிநபர் சராசரி வருமானம் 1,280 டொலர்களாகும். இந்த மக்களின் மூன்றில் ஒரு விகிதத்தினர் சேரிப்புற வாழ்க்கைக்குள் சிக்கியுள்ளனர். சர்வதேசக் கடன் 220 கோடி டொலராகக் (1995 ல்) கொண்டிருந்த இந்நாட்டின் வர்த்தகத்தில், 1993ல் அமெரிக்கா இதனிடம் வாங்கிய பொருட்களின் பங்கு 33,3 வீதமாகும். இதேநேரம் 1994ல் குவத்தமாலாவின் ஏற்றுமதியில் அமெரிக்காவின் பங்கு 45 வீதமாகும்.

தென் அமெரிக்காவில் உள்ள குவாத்தமாலா ⇨

1994 ம் ஆண்டின் தேசிய வருவாயில் நான்கில் ஒன்றைக் கடனாகக் கொண்டுள்ள ருசியாவில் சனநாயம் என்பது ஏகாதிபத்தியங்களுக்கு பணம் கடத்துவதையே நிறுவி நிற்கிறது. கடனற்ற ஒருவன் கடன்காரனாக மாறுகின்றன் எனின் அவன் சூறையாடப் படுகின்றான் என்பது சொல்லப்படாத அர்த்தமாகும். மக்கள் மீதான வாழ்க்கை இழப்பு, சூறையாடல்களை கடந்த காலத்துடன் ஒப்பிட்டு போராட புறப்படுவது ஓர் இயல்பான நடவடிக்கையாகும். மக்கள் தமது கடந்த வெற்றிகளை மீளப் பெற போராடுவது மாத்திரமே உள்ள பணி என்பதை கண்முன் காண்கின்றனர். நாம் இனி வருடா வருடம் பொருட்களின் விலை அதிகரிப்பைப் பார்ப்போம்.

| ஆண்டு | வீதத்தில் |
|---|---|
| 1992 | 1353% |
| 1993 | 874% |
| 1994 | 302% |
| 1995 | 190% |

வருடா வருடம் பொருட்களின் விலை அதிகரிப்பு என்பது எட்டாத நிலைக்கு அதிகரித்துள்ளது. மக்களுக்கு கடந்த சில வருடங்களாக சம்பளமின்றி பொருட்களாகவோ, ஒரு பகுதி சம்பளமாகவோ, அல்லது சம்பளம் இன்றியோ உள்ள இன்றைய நிலையில் விலை அதிகரிப்பு என்பது குருவித் தலையில் பனம்பழம் போல பாரிய சுமையை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் பணவீக்கம் மேலும் பரிசுகளாக அவர்களை வறுமைக்குள் தள்ளிச் செல்கின்றது. பணவீக்கத்தை எடுப்பின்:-



www.tamilarangam.net



| ஆண்டு | ரூபிளில் ஒரு டொலர் |
|---|---|
| 1983 | 0,73 |
| 1986 | 0,77 |
| 1992 | 222 |
| 1993 | 932 |
| 1994 | 2,005 |
| 1995 | 4,558 |
| 1996 | 5,600 |
| 1997 | 6,110 + |

பணவீக்கம் ஆதாள பாதாளத்துகுள் வீழ்கிறது. 1986 உடன் ஒப்பிடும் போது கடந்த பத்து வருடங்களில் 8,500 க்கும் மேலாக பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. அதாவது பணப்பெறுமதி இன்று மங்கிச் செல்லும் வகையில் உள்ளது. பணம் என்பது ஒவ்வொரு நாளும் வெறும் பேப்பராக மாறுகிறது.

விலை அதிகரிப்பு, பணவீக்கம் , தலா வருமான இழப்பு, சம்பளத் இன்மை என எண்ணற்ற வாழ்வியல் இழப்பு என்பது மக்களை பட்டினிக்குள் நகர்த்துவதுடன், தமது கடந்தகால வாழ்வை நினைத்து நினைத்து ஏங்கவைக்கிறது. 1917 க்கு முன்னர் குறைந்தது உருளைக்கிழங்கை தன்னிலும் அவித்து சாப்பிட முடிந்த நிலை இன்று இல்லாமலே போய் விடுகின்றது. சாதாரண உற்பத்திகள் வேகமாக வீழ்ச்சியை காண்கின்றது.

| ஆண்டு | கோதுமை உற்பத்தி (லட்சம் தொன்) | மாட்டிறச்சி உற்பத்தி (லட்சம் தொன்) |
|---|---|---|
| 1992 | 462 | 547 |
| 1993 | 436 | 522 |
| 1994 | 321 | 433 |
| 1995 | 295 | 433 |

அமெரிக்காவின் ஒரு பொம்மையே என்பதை இவ்வர்த்தகம் தெளிவாக உறுதி செய்கிறது. 2 லட்சம் மக்களின் தியாகத்தின் மீதான நீண்ட போராட்டத்தின் விளைவுகள் அந்த மக்களக்கான, எந்த தீர்வுகளுமின்றி கிடப்பில் போடப்பட்டு விட்டது என்ற பலத்த அபிப்பிராயங்களையும் மீறி, 1997 மாசி மாதம் குவத்தமாலா மக்கள் போர்குணங்களோடு வீதியில் இறங்கியுள்ளனர்.

15,000க்கும் மேற்பட்ட மக்கள் குவத்தமாலா வின் சனாதிபதியை இராயினாமா செய்யக்கோரி தலைநகரில் திரண்டு ஆர்பாட்டங்களில் குதித்தனர். 1996ல் ஆட்சிக்கு வந்த இவ் ஆட்சி மீதான மக்களின் சரியான போராட்டம், இந்த மக்களின் நீண்ட தியாகங்களை வீண்போக்கி விடாது என்பதை நம்பிக்கை யோடு சுட்டி நிக்கிறது.



www.tamilarangam.net



கோதுமை உற்பத்தி உலகில் 4ம் இடம்.
மாட்டிறச்சி உற்பத்தி உலகில் 6ம் இடம்.
உற்பத்திகள் லட்சம் தொன்னில்

| ஆண்டு | தானிய உற்பத்தி | தினை உற்பத்தி |
|---|---|---|
| 1992 | 1,038 | 15,3 |
| 1993 | 949 | 11,3 |
| 1994 | 786 | 4,8 |
| 1995 | 621 | 6,0 |

தானிய உற்பத்தி உலகில் 3ம் இடம்
தினை உற்பத்தி உலகில் 10ம் இடம்
உற்பத்திகள் லட்சம் தொன்னில்

| ஆண்டு | ஆட்டிறச்சி உற்பத்தி | உரு.கிழங் உற்பத்தி |
|---|---|---|
| 1992 | 522 | 382 |
| 1993 | 482 | 380 |
| 1994 | 318 | 338 |
| 1995 | 318 | 338 |

ஆட்டிறச்சி உற்பத்தி உலகில் 6ம் இடம்.
உருளைக்கிங்கு உற்பத்தி உலகில் 3ம் இடம்
உற்பத்திகள் லட்சம் தொன்னில்

| ஆண்டு | மீன்பிடி உற்பத்தி | பெற்றோல் உற்பத்தி ஆயிரம் தொன் |
|---|---|---|
| 1992 | 56,1 | 39,30 00 |
| 1993 | 44,6 | 35 20 00 |
| 1994 | 34,7 | 31 60 00 |
| 1995 | ? | 30 50 00 |

மீன்பிடி உற்பத்தி உலகில் 6ம் இடம்.
பெற்றோல் உற்பத்தி உலகில் 3ம் இடம்.
ருசிய உற்பத்தியை எடுப்பின் அது உணவு, சுரங்கம், தொழிற்சாலை என அனைத்து உற்பத்தியும் கடந்த 4

## பிரன்சு நாசிகளின் தொடர் வெற்றிகள்



மாசி மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் ஒன்றில் நாசிக் கட்சி முதற் சுற்றில் முன்னணிக்கு வந்து, இரண்டாவது சுற்றில் அதைக் கைப்பற்றியது. இந்த நாசிக் கட்சியின் 4வது வெற்றி இதுவாகும். வெளிநாட்டவர்களுக்கு எதிராக இயங்கிவரும் இக் கட்சியானது, இந்த முதலாளித்துவ சனநாயக எல்லைக்குள் குசியாக உயிர் வாழ்கின்றது.

இந்த சனநாயகம் எப்போதும் பாசிசம் வரை விரிந்து கிடக்கும் ஒரு தளமாக இருப்பதுடன், ஒடுக்கப்பட்ட மக்களின்

www.tamilarangam.net



நலன்களில் ஒரு துளிகூட பங்கு வகிப்பதில்லை என்பததை இந்த வெற்றியானது மீளவும் ஒருமுறை புகட்டி நிக்கிறது.

கடந்த ஒரு மாதத்துக்கு முன் நடந்த ஒரு தேர்தலில் எல்லாக் கட்சிகளையும் புறம் தள்ளியபடி கமினிசக்கட்சி, நாசிக்கட்சி முதற் சுற்றில் தெரிவாகியது. இறுதியில் போலி கமினிசக் கட்சி வெற்றிபெற்றது.

இன்று மக்கள் வலது, இடது தீவிர நிலையை எடுக்கும் அளவுக்கு நிலைமை தீவிரமடைந்து செல்கிறது.

உலகப் பொருளாதார நெருக்கடி என்றும் இல்லாதவாறு தீவிரமாகி 3ம் உலக யுத்தத்தை நோக்கி விளிம்பிலிருந்து குதிக்கத் தயாராகும் நீச்சல் வீரனைப்போல நிற்கிறது. தீவிர வலதுகள், நாசிகள் அந்த யுத்தத்தின் உண்றுகோலாக உருவாகி வருகின்றனர். மறுபுறம் உள்நாட்டு புரட்சியின் ஊடாக ஆட்சியை மக்கள் கைப்பற்றி விடுவது என்ற இரு நிலைக்குள் மக்கள் கூறுபோடப் படுகின்றனர்.

வருடத்தில் விதிவிலக்கின்றி இரண்டு மடங்குகளால் குறைந்துள்ளது. எந்த உற்பத்தியிலாவது முன்னேற்றம் உண்டா என்று பாத்தால், இல்லை என்பதே பதில். அந்தளவுக்கு உற்பத்தி முடக்கம், சமூக பின்னடைவை ஊக்குவிக்கிறது. மக்கள் வாழ்வது என்பது இல்லை என்ற நிலைக்குள் உன்னத சனநாயகம் ஏற்படுத்தியுள்ளது. ஒரு சிறு பகுதியின் ஆட்டம் பாட்டத்தை சனநாயகமாக மெச்சக் கோரும் சனநாயகம் கோடன கோடி ருசிய மக்களை பட்டினிக்குள் தள்ளிச் செல்கின்றது.

1992 க்கும் 95 க்கும் இடையிலான மொத்த தேசிய வருமான இழப்பு கால் பங்கால் அதிகரித்துள்ளது. ருசியாவின் சனத்தொகை அதிகரிப்பு பூச்சியம் என்ன நிலையில். இந்நிலை எனின் நாம் மக்களின் இழப்பை - வாழ்க்கையை - கற்பனை பண்ண முடியும். உலகில் பல திறந்த சனநாயகம் உருவாகமுன் இருந்த முன்னிலை. மற்றும் வாழ்வு என்பது இன்று இல்லை என்றபோது, இன்றும் பல உற்பத்தியில் உலகில் முன்னணியில் வகிக்கிறது. இருந்த போதும் மக்கள் வறுமைக்குள் சிக்கிச் செல்கின்றனர். இது ஏன்? வறுமைக்குக் காரணம் சனத்தொகை அதிகரிப்புத்தான் என்ற முதலாளித்துவ சனநாயக கூக்குரல்களை பொய்பிக்கும் வகையில் ருசியா ஒரு தனி எடுத்துக் காட்டாகும். ருசியாவில் ஒரு நபருக்கு ஒரு வருடத்துக்கு 228 கிலோ உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்ட போதும், இது போன்று அன்னளவாக பல்வேறு உற்பத்திகள் செய்யப்பட்ட போதும் மேலும் மக்கள் பட்டினியிலேயே உள்ளனர் இது ஏன்?

வறுமைக்குக் காரணம் சனத்தொகை என பிரகடனம் செய்து குளிர்காயும் ஏகாதிபத்திய கொள்ளைக் கூட்டம், ருசியாவின் வறுமைக்கு எந்த காரணத்தையும் விளக்க முடியாதுள்ளனர் உதாரணமாக:- சப்பானை எடுப்பின் 12.5 கோடி சனத்தொகையைக் கொண்ட உலகில் 8ம் இடத்தில் உள்ளது. 1994

மக்களின் அறி யாமையுடன் கூடிய சனநாயகம் பற்றிய நடுநிலை கோட்பாடு தீவிர நாசிகளை இலகுவாக வெல்ல வைக்கிறது. இன்றைய தேவைபோ அறி யாமையை அடித்து நொருக்குவதும், மக்கள் தமது கைகளுக்கு அதிகாரத்தைப் பெற போராடுவதுமே ஆகும். இது எல்லா மானிட ஜென்மங்களினதும் இன்றைய வரலாற்றுக் கடமையாகும்.

## களவாடும் ஏகாதிபத்தி யங்கள்

அண்மையில் நொஸ்வே என்ற டென்னாட்டு நிறுவனம் புழுங்கல் அரிசியை தான்தான் கண்டுபிடித்ததாகக் கூறி ஐரோப்பா வில் காப்புரிமை பெற்றதுடன். இந்தியா போன்ற நாடுகளிலும் உரிமை கோரியுள்ளது. பாரம்பரியமாக மக்கள் தம் அறிவாற்றலால் கண்டுபிடித்த இந்த அரிய வெற்றிகளை இன்று பரிசோதனைச் சாலைக்குள் கொண்டு செல்லும் ⇨

உலகசெல்வத்தில் பதின் ஒன்றில் இரண்டு மடங்கை தனதாக்கி 4,65,110 கோடி டொலரை கொள்ளையடித்து உலகில் இராண்டாம் இடத்தில் உள்ளது. உலகில் 8ம் அதிக சனத்தொகை கொண்ட சப்பான் முன்னணியில் உள்ளது. அதே அளவுக்கு ருசியாவைப் பொறுத்த வரையில் 14,83 கோடி சனத்தொகையைக் கொண்டு உலகில் 6ம் இடத்திலுள்ளது. 1950 ல் இராண்டவது உலக வருமானத்தைப் பெற்ற ருசியா 1994ல் 11ம் இடத்துக்குச் சென்றுள்ளது. இது 1995ல் 13ம் இடத்துக்குச் சென்றுள்ளது.

அதாவது சப்பான், ருசியாவை எடுத்துக் கொண்டால் இவை அண்ணளவான சனத்தொகையை கொண்டிருந்த போதும் சப்பானுடன் ருசியாவை ஒப்பிடமுடியாத கீழ்நிலையில் உள்ளது. அதாவது தேசிய வருமானத்தில் 12 மடங்கால் கீழ்நிலையில் உள்ளது. அதாவது ருசியா பல தன்னிறைவு உற்பத்தியைக் கொண்டிருந்த போதும் அது வறி-யநிலையில் வைக்கப்பட்டுள்ளது இது ஏன்?

வறுமை, செல்வத்தை தீர்மபனிப்பது அரசியலாக உள்ளது. பொருட்களின் விலையைத் தீர்மானிப்பது ஏகாதிபத்தின் கையில் உள்ளது. தமது பொருட்களை உயர்ந்த விலையிலும், தாம் வாங்கும் பொருட்களை மந்தவிலையிலும் தீர்மானிப்பது ஏகாதிபத்திய அரசியலே ஒழிய மக்கட் தொகையோ, உள்நாட்டு முதலாளித்துவ அரசியலோ அல்ல. மாறாக உள்நாட்டின் அரசியலின் சனநா-யகம் உலக ஏகாதிபத்தியத்தை தலையில் சுமந்து செல்லுவதற்கான கைப்பந்தமே ஆகும்.

சனத்தொகை, எவ்வளவு உற்பத்தி.... என எதுவுமே உள்நாட்டு செல்வத்தை தீர்மானிப்பதில்லை. மாறாக உலக அரசி-யல் என்ன நிலையில் உள்ளது, உள்நாட்டு அரசியலுக்கும் அதற்கும் என்ன உறவு உள்ளது என்பது மட்டுமே அனைத்தையும் தீர்மானிக்கின்றது. ருசி-யாவின் நவீன விஞ்ஞானம், தேவையான



www.tamilarangam.net

www.tamilarangam.net



# இன்னாள் முதலாளித்துவ நாடும்,

சனத்தொகை, தேசிய வருமானம், முன்னணி உற்பத்தி என பலவற்றைக் கொண்டிருந்த போதும் உலக அரசியலுடன் அந்த நாட்டின் அரசியல் கொண்டிருக்கும் உறவு சொந்த நாட்டு மக்களின் வாழ்வின் இழப்பை வேகப்படுத்துகிறது.

இன்று உலகம் ஒற்றைப் பொருளாதார மையப்படுத்தல் என்பது, தேசிய பொருளாதாரத்தை சிதைக்கின்றது. இருக்கும் செல்வங்கள் பன்னாட்டு கம்பனிகளின் சொத்துரிமையாகிறது. இதன் மூலம் சொத்துக்கள் கடத்தப்படுவதுடன், எலும்பும் தோலுமாக வீசியெறிப்படுகின்றன. இந்த நிலை என்பது அமைதியன சனநாய சூறையாடலை அனுமதிக்கின்றது. மக்கள் தமது கடந்தகால வெற்றிகள், சுயாட்சியான தன்மை, சுயமான சனநாயகத்தைத் தேடி மீளவும் வீதியில் இறங்கியுள்ளனர். 1997 மார்ச் மாதம் 3 கோடி மக்கள் வீதியில் இறங்கி லெனின், ஸ்ராலின் படங்களுடன் ஆர்ப்பாட்டம் செய்தனர் செய்கின்றனர்.

ஆலைத்தொழில் முன்னொருபோதும் இல்லாத வீழ்சிக்குச் செல்கின்றது. 1985ல் தொழில்சாலை சுட்டெண் 100 இருந்தது எனின், 1995ல் அது 63 ஆக மாறியது. இது பிரான்சில் 116,2 ஆக மாறியுள்ளது. கடந்த 10 வருடங்களில் ஆலைத் தொழிலில் மூன்றில் ஒன்றாகக் குறைந்துள்ளது. இது மேலும் கீழ்நோக்கி வேகமாகச் செல்கின்றது. கொப்பச்சோவின் சமூக சனநாயக ஆட்சியின் போதுகூட இருந்த சமூகவாழ்வானது, இன்றைய முதலாளித்துவ சனநாயக சகதியில் விழுந்து புளித்து நாறுகிறது.

இனிநாம் பிரிந்துசென்ற முன்னாள் சோவியத் நாடுகளின் தேசிய வருமானத்தை (தேசிய வருமானம் கோடி டொலரில்) ஆய்வு செய்வோ மெனின்:-

பன்னாட்டு நிறுவனங்கள், கண்டுபிடித்த மக்களையே காப்புரிமையின் பெயரால் வரி கட்ட நிற்பந்திக்கின்றனர்.

இந்த வகையில் வேப்பமரம், மஞ்கள் என்பவற்றை காப்புரிமை பெற்றுள்ள ஏகாதிபத்திங்கள், இதன் சொந்தக்காரர் களையே ்ந்நியன் ஆக்குகிறது. ஊரைக் கொள்ளையடிப்பவன் வைப்பது சட்டமாகவும், மக்கள் பறிகொடுத்து நிற்பதுடன், வரியும் கட்டி பின் அவர்களுக்காக கைகட்டி, தலை கவிழ்ந்து பயந்து வாழ வைப்பதுதான் இந்த உலக ஒழுங்கும், சனநாயகமும். இதை நாம் வேரறுப்பது எப்போ?



www.tamilarangam.net




| ஆண்டு | ருசியா தே.வரு கோ.டொலரில் | உக்கிரோன் தே.வரு கோ.டொலரில் |
|---|---|---|
| 1992 | 50,000 | 12,270 |
| 1993 | 40,750 | 9,968 |
| 1994 | 39,249 | 8,200 |
| 1995 | 38,530 | 7,320 |

| ஆண்டு | பெல்ருசியா தே.வரு | யோர்யி தே.வரு |
|---|---|---|
| 1992 | 3,300 | 500 |
| 1993 | 2,920 | 314 |
| 1994 | 2,194 | 270 |
| 1995 | 2,050 | 250 |

| ஆண்டு | ஆர்மேனியா தே.வரு | AZEEBAIDJAN தே.வரு |
|---|---|---|
| 1992 | 300 | 600 |
| 1993 | 254 | 490 |
| 1994 | 253 | 373 |
| 1995 | 250 | 307 |

| ஆண்டு | KIRGHIZIE தே.வரு | MOLDAVIE தே.வரு |
|---|---|---|
| 1992 | 366 | 570 |
| 1993 | 293 | 516 |
| 1994 | 275 | 385 |
| 1995 | 300 | 365 |

| ஆண்டு | MONGOLIE தே.வரு | TANJIKISTAN தே.வரு |
|---|---|---|
| 1992 | 250 | 395 |
| 1993 | 78 | 269 |
| 1994 | 80 | 208 |
| 1995 | 86 | 183 |


தமிழ்நாட்டு பெண்ணுரிமைக் கழக
பண்பாட்டுச் சீரழிவை எதிர்த்து நட
26-8-96ல் சட்டசபைக்குள்ளே
துண்டுப்பிரசுரங்களை
இவைகளைத் தொடர்ந்து ஆபாச
எரிப்பு போன்றவற்றை நடைமுறைப்ப
தடைசெய்யக் கோரியும் பல தொ
நாட்டில் நடாத்தி
இதன் தொடர்ச்சியில் சட்ட
துண்டுப்பிரசுரத்தைக் கண்டு சினந்
யின் ஆண்மன - ஆபாச வக்கிர
தன்மையைக் கெடுத்து விட்டதாக"
தயடுத்து பொய்யான குற்றங்களை
கைதுசெய்து, தன் புனிதத் த
சட்டச
இருநாட்கள் சிறையிலிருந்து வி
ஆணாதிக்க பொலீஸ் சட்டத்திற்கு
கைது செய்தது. தொடர்ந்தும்
பொய்வழக்கை பதிவு செய்து
ஆபாசப் பொலீஸ். மதுரையில்
எதிரான குற்றச்சாட்டில் கருணாநி
தனது ஆபாச நிர்வா
இந்த ஆபாச விற்பனர்கள் அ
உறவினர்களின் வீடுகளுக்குள்
வக்கிரக் கைவரிசையை நிலை
வன்முறையில் ஈடுபட்டது. பொ
றயில் தள்ளியிருப்பதாக தனது
வழமைபோல அ
அரசு பொலீஸ் என்பன ஆபாச
ஒரு பண்பாட்டின் சின்ன
எடுத்துக்க
ஆபாசத்தை எ
பெண்ணுரி

www.tamilarangam.net



ம் ஏகாதிபத்திய ஆபாச
ாதும் போரின் ஓர் அங்கமாக
புகுந்து, ஆபாச எதிர்ப்பு
வீசி எறிந்தனர்.
ரைப்பட எரிப்பு, ஆபாச புத்தக
த்தியும், ஆபாசப் படங்களைத்
டர் போராட்டங்களை தமிழ்
வருகின்றனர்.
சபையினுள் வீசப்பட்ட
நபோன மான்புமிகு கருனாநிதி
ங்கள் "சட்டசபையின் புனிதத்
ஒரு முறை புலம்பியது. அவை-
ச் சுமத்தி, எட்டு செயல்வீரரை
ர்மையை (?) காப்பாற்றியது
பை.

டு வெளியே வந்த பெண்களை
புறம்பாக மீளவும் அவர்களைக்
சித்திரவதை, மிரட்டல் மூலம்
வேலூர் சிறைக்குள் தள்ளியது
திரைப்படம் எரிப்பு (புளுபிலிம்)
தி அரசு தனது வேட்டி அவிழ்த்து
னத்தை ஆடியுள்ளனர்.
ந்த செயல் வீரர்களின் வீடுகள்,
புகுந்து தனது அதிகார ஆபாச
நாட்ட மிரட்டல் மற்றும் பொலீஸ்
லீஸ் பெண் தீவிரவாதிகளை சிறை-
ஆபாசக் கூத்தை நியாயப்படுத்தி
ிக்கை விடுகின்றனர்.
ஆணாதிக்க வக்கிரங்களே ஒழிய
அல்ல என்பதற்கு இதைவிட
வேண்டுமா?

ர்த்து தமிழ்நாட்டு
ணமக் கழகம்

| ஆண்டு | ESTONIE தே.வரு | LITUANIE தே.வரு |
|---|---|---|
| 1992 | 435 | 640 |
| 1993 | 410 | 490 |
| 1994 | 435 | 560 |
| 1995 | 448 | 595 |

| ஆண்டு | THURMENISTAN தே.வரு | LETTONIE தே.வரு |
|---|---|---|
| 1992 | 540 | 560 |
| 1993 | 600 | 600 |
| 1994 | 540 | 592 |
| 1995 | 520 | 600 |

| ஆண்டு | OUZBERIS-TAN தே.வரு | KAZAKHSTAN தே.வரு |
|---|---|---|
| 1992 | 2,100 | 2,950 |
| 1993 | 2,000 | 2,649 |
| 1994 | 2,000 | 1,890 |
| 1995 | 2,040 | 1,700 |

மேலே முன்னாள் சோவியத்தில் இருந்து உருவாகிய 16 நாடுகளின் தேசிய மொத்த வருமானத்தை நாம் அட்டவணை படுத்தியிருந்தோம். முதலாளித்துவ மீட்சியும், தேசிய இன பிரிவும் அந்த நாட்டை மேலும் முன்னேற்றும் என்ற எல்லா முதலாளித்துவ, திரிபுவாத, நவமார்க்சிய கோட்பாட்டின் கதைகளை நொருக்கும் வகையில் உள்ளது ருசியாவின் கடந்த நான்கு வருட தேசிய வருமானத்தின் இழப்புக்கள்.

ஒரு தேசிய இனம் அடக்குமுறைக்கு எதிராக பிரிந்து செல்வது என்பது, தனது சொந்த பொருளாதாரத்தை மேம்படுத்த செய்யும், ஆனால் அது ஒன்றுபட்ட மேம்பாட்டை எட்டிவிட மாட்டாது. சோவி

www.tamilarangam.net



## ஒடுக்கப்பட்ட மக்களின் உணவுக் கலகம்.

இந்திய மத்திய பிரதேசத்தில் 96 டிசம்பர் 8ம் திகதி வறுமையில் வாடிய மக்கள் உண வுக் கலகத்தில் இறங் கி கிராமச் சந்தை ஒன்றை முற்றாக சூறையாடினர். கிட்டத் தட்ட ஒரு இலட்சம் பெறுமதியான உணவுத் தானியங்களை பதுக் கல் வியாபாரிகளிட மிருந்து பறித்துச் சென்றனர்.

உலகவங்கியின் மானியக் குறையுடன் ரேசன் கடைகள் முழு வதும், ... உலக வங்கியின் மனிதாபிமான உலகை சூறையாடும் கண் ணோட்டம், அங்கு அமு லில் இருந்த 10 கிலோ கோதுமை மானியம் நிறுத்தப்பட்டது. அத்து டன் உலக வங்கியின் ஆலோசனைக்கு இணங்க மாவின் விலை 5 இருந்து 12 ரூபாவாக உயர்த்தப்பட்டது. இன்று வறிய மக்கள் வாழமு-டியாத நிலையும் மத்திய வர்க்கம் வறிய பிரிவாக மாற்றி வரும் இந்த வறுமை மக்க ளை கலகத்தில் குதிக் கவைக்கிறது. இது உலகில் பெரும்பான் மையான உழைக்கும் மக்களின் பொதுப் பிரச்சினையாக மாறி வருகிறது. ○

யத்தின் உடைவு என்பது மெல்லிய கீறல்களாக இருந்த தேசிய இன முரண் பாடுகளை ஏகாதிபத்தியமும், உள்ளூர் முதலாளிகளும் உடைந்த பின்னர் நாட்டை சூறையாட பின் நிற்கவில்லை. ஐ.எம்.எவ் க்கும், உலகவங்கிக்கும் திறந்துவிட்ட இந்நாடுகள், பெருந் தொகை களாக வாங்கி குவித்த கடன் ஒருபுறமும், அதற்காக கட்டி அழும் வட்டி மறுபுறமு மாக உள்ளூர் தரகு முதலாளிகள், ஏகாதிபத்தியங்கள் ஒன்றை ஒன்று சார்ந்து தேசிய இனங்களின் செல்வத் தை சூறையாடுவது என்பது நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. இது அந்த மக்களின் தேசிய வளங்களை மட்டுமன்றி கட்டிய கோவணத்துண்டையே கொள்ளை யடிப்பது எனத் தொடர்கிறது.

அதைமறைத்துவிட பல மத அமைப் புக்களும், பல மனித உரிமை அமைப் புக்களையும், என பல ஆயிரம் ஊழியர்-களை ருசியாவுக்குள் இறக்கியுள்ளனர். உதாரணமாக:- 'இயேசுவின் கோயில்' என்ற மத அமைப்பானது சாதாரண மதங்களில் இருந்து வேறுபட்ட 'செக்' என்ற பிரிவுக்கு உள்ளது. இவர்கள் கோடிக்கணக்கில் தமது பைபிளை அமெ ரிக்காவில் அச்சிட்டு, ருசியாவில் இலவ சமாக விநியோகம் செய்கின்றனர். அரசின் ஆதரவுடன் பாடசாலைகள் முதல் அனைத்து நிறுவனங்களுக்கும் ஊடாக இயங்கும் இவ்வமைப்பில் 50 லட்சம் ருசி யர் இணைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த மதப்பிரிவை ருசிய சனநாயகப் பாராளுமன்றம் தடைசெய்யக் கோரி நிறை வேற்றிய தீர்மானத்தை யெல்சின் சனநாயகம் மறுக்கிறது.

மக்களை மந்தைகளாக்குவதன் மூலம் மீண்டும் சிகப்பு புயல் வந்துவிட்டது என்ற கனவுகளை நிறைவு செய்ய, டொலர் நோட்டுக்களைக் கூட வறியவர்களுக்குக் கொடுத்து ஆசைகாட்டி வேட்டையாடு கின்றனர். இப்படி எல்லா விளம்பரங்களும் சோவியத்தில் கடைவிரித்து கமினிச பூதத்தை தடுக்கவென அமெரிக்காவும், மேற்குநாடுகளும் பணத்தை வாரி இறைக் கின்றனர்.

www.tamilarangam.net



# இன்று புரட்சியின் விளிம்பில்




இதன் மூலம் சொந்த தேசிய வருமான இழப்பை மறைத்து விடுவதன் மூலமாக கட்டியிருக்கும் கோவணத்தையும் பிடுங்கி விட முடியுமென கனவுகாண்கிறது இந்த ஏகாதிபத்தியங்கள்.

இனிநாம் இந்த நாடுகளின் தனிநபர் வருமானங்களைப் பார்ப்போம்:- டொலரில்

| நாடுகள் | 1983 | 1986 | 1987 | 1989 | 1992 | 1993 | 1994 | 1995 |
|---|---|---|---|---|---|---|---|---|
| ருசியா | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 3,400 | 3,000 | 2,650 | 2,600 |
| உக்கிரைன | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 2,360 | 1,910 | 1,570 | 1,400 |
| பெல்ருசியா | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 3,210 | 2,840 | 2,160 | 2,000 |
| ESTONIE | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 2,900 | 2,720 | 2,820 | 3,000 |
| LETTONIE | [illegible]700 | 6,350 | 7,000 | 8,375 | 2,000 | 2,310 | 2,290 | 2,400 |
| LIEUANIE | 4,700 | 6,350 | 7,000 | [illegible]375 | 1,700 | 1,300 | 1,500 | 1,600 |
| KAZAKHIAN | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 1,720 | 1,540 | 1,100 | 1,000 |
| OUZBEK-ISTAN | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 1,000 | 900 | 900 | 900 |
| TURKMEM-STAN | 4,700 | 6,350 | 7,0[illegible] | 8,375 | 1,400 | 1,600 | 1,350 | 1,150 |
| MOLDAVIE | 4,700 | 6,350 | 7[illegible] | 8,375 | 1,300 | 1,180 | 870 | 850 |
| KIRGHIZIE | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 810 | 650 | 600 | 680 |
| AZERBAID-JAN | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 810 | 660 | 500 | 420 |
| MONGOLIE | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 1,000 | 320 | 340 | 360 |
| TANJIK-ISTAN | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 700 | 470 | 350 | 315 |
| யோர்ஜி | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 800 | 580 | 500 | 450 |
| ஆர்மேனியா | 4,700 | 6,350 | 7,000 | 8,375 | 950 | 680 | 670 | 700 |

www.tamilarangam.net



# விவசாயிகள் விடுதலை முன்னணி நடத்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு போர்!



96 நவம்பர் 25ல் போடி நகரில் அமைந்திருந்த 6000 தேக்கமரக் கன்றுகளை வெட்டி ஏகாதிபத்திய எதிர்ப்பு போருக்கு தமிழ்நாட்டு விவசாயிகள் விடுதலை முன்னணி அறைகூவல் விடுத்துள்ளது.

அந்நிய ஏகாதிபத்திய அடுக்கு மாளிகைகளை அலங்கரிக்கவென நடப்பட்ட தேக்கமர கன்றுகள் மீது சுற்று வட்டார விவசாயிகள் தொடர்ச்சியான போராட்டத்தை ⇨

தலா வருமான வீழ்ச்சி என்பது ஒவ்வொரு மனிதனையும் பாதிக்கும் விடயமாக உள்ளது. அத்துடன் இந்த நாடுகளில் உள்ள 10 வீத மேட்டுக்குடி தனிமனித வருமானத்தையே சூறையாடிச் செல்லும் போது கிடைப்பது எதுவுமே இல்லை. 1989 ல் துர்கிஸ்தான் பெற்ற தலா வருமானத்தை விட இன்று 26 மடங்கு கீழாகவே வருமானத்தை பெற்றுவது மட்டுமின்றி, ஓர் ஏழை அதைவிட மோசமாகப் பாதிக்கப்படுகின்றான். அதாவது 90 வீதமானோர் மிகக் கீழாக உள்ளனர்.

முன்பு சோவியத் ருசியாவாக இருந்த போது ஓரளவில் இருந்த சமபங்கீடும், பின் சமூகசனநாயக காலத்தில் (முதலாளித்துவ மீட்சியில்) இருந்த பங்கீடும் இன்று இல்லாமற் போனது மட்டுமன்றி, பிரிந்து போனதால் பாரிய இழப்பை தேசிய இனங்கள் சந்தித்துள்ளது. மீளமுடியாத வறுமை, மறுபுறம் கண்காணத கொள்ளைகள் என்பனவற்றால் மக்கள் தமது வாழ்வியலில் இயல்பாகவே ஐக்கியத்தை கோருவது தீவிரமாகிறது.

ஒன்றுபட்ட தேசிய இனங்களாக இருந்தபோது பெற்றுவிட்ட சலுகைகள், வளங்கள் இன்று அறவே இல்லை என்ற அளவுக்கு சென்றுள்ளது. மக்கள் தமது கடந்தகால வெற்றிகள், வாழ்க்கைத்



1917 நவம்பர் சோவியத்தில்.....

www.tamilarangam.net



தரத்தை எண்ணி ஏங்குவதும், அதற்காகப் போராடுவது என அதிகரித்த நடமுறையில் தளத்தில் இறங்குகின்றனர். சரியான கமினிச இனம்காணலை காண்பதுடன், 1960 ல் மாவோ முன்வைத்த விமர்சனத்தை தமாகவே நடைமுறையின் ஊடாக உணர்கின்றனர். இதனால்தான் மக்கள் சிகப்புக் கொடி மட்டுமின்றி லெனின், ஸ்ராலின் படங்களுடன் மட்டும் வீதியில் இறங்குகின்றனர்.

இந்த நாடுகளுக்கு இடையிலான ஐக்கியம் தமது பொருளாதார இழப்புகள் ஊடாக நடைமுறையை உணரும் மக்கள், தவிர்க்க முடியாது வேறு இரு தொடர்புகனையும் மையப்படுத்துகின்றது. இந்த நாடுகளில் ஏற்றமதி இறக்குமதி ஒன்றையொன்று சார்ந்துள்ள அதேநேரம், ஒன்றுக்குள் ஒன்றாக அம்மக்கள் கலந்துபோய்யுள்ளனர்.

மக்கள் ருசியாவாக இருந்தாலும், முன்னாள் சோவியத் நாட்டு மக்களாக இருந்தாலும் தம்மை ஒன்றுபட்ட சக்தியாக, சோவியத் மக்களாக, கடந்தகால கமினிச வெற்றி தோல்விகளை மீளாய்வு செய்வது தவிர்க்கமுடியாததாகவும், அதுவே நடை முறைப் போராட்டமாகவும் அவர்கள் முன் இன்றுள்ளது.

ஒரு சமூகம் தனது அடிப்படை உயிர் வாழ்தலுக்கான பாதை முன்நோக்கியதாக உள்ளது என்பது, தவிர்கமுடியாது வீதியில் இறங்கவும், போராடவும் கற்றுக் கொடுகிறது. அது தமது கடந்தகால இரத்தம் சிந்திய வரலாற்றை அதன் வெற்றியை பாதகையாக மாற்றுகின்றது. இந்த மக்கள் மீது உளவி யல் ரீதியாக, கருத்தியல் ரீதியாக நிமிடத் துக்கு நிமிடம் தொலைக்காட்சிகள், செய்தித்தாள்கள், ஒருபுறம் சேறடிப்பை நிகழ்த்த: மறுபுறம் பெரியளவில் மதபீ டங்கள், தனிநபர் குழுக்கள் என எண்ணற்ற செயல் தளங்கள் மக்களுக்கு வலை விரிக்கின்றன. இந்த கபடநோக்கங்கள் அணியணியாக நிகழ்ந்துவர, மறுபுறம் மக்களோ அதையும் மீறி தம் கைகளை உறுதியாக உயர்த்துகின்றனர்.

கமினிச சர்வாதிகாரிகள், "ஸ்ராலின் சர்வாதிகார கொலைகாரன்" என்ற

நடத்தி, இறுதியில் மரங்களை வெட்டி எறிந்தனர்.

பல ஆயிரம் வி-வசாயிகளின் நிலங்களை மிரட்டியும், ஆசை காட்டியும், கள்ள கையெழுத்து போட்டும் கைப்பற்றிய விவசாய நிலங்களில், மேல்நாட்டு பணக்கார பன்றிகளின் அழகுக்காக தேக்குமரங்களை நாட்டினர் இந்திய கைக்கூலிகள்.

இந்த நிலத்தில் 300 முதல் 400 அடி துளையிட்டு நீரை வெளியேற்றி, சுற்று வட்டரமே நீர் பஞ்சத்தால் வரண்டு போக, இந்தப் பண்ணையைச் சுற்றி முட்கம்பியிட்டு மின்சாரம் பாச்சினர். இதனால் சுற்று வட்டார கால்நடைகள் இறந்து போக, அதை எதிர்த்து மின்கம்பிகளை மக்கள் முன்கூட்டியே அழித்தொழித்தனர்.

தொடர்ந்து இந்த இந்திய கைப்பாவைகளின் அலுவலகம் சூறையாடப்பட்டு, ஆவணங்கள் அழிக்கப்பட்டன. இந்தியா, மக்களின் அன்றாட பிழைப்புக்கே ⇨

www.tamilarangam.net



வேட்டுவைக்கும், இந்நிய ஏகாதிபத்திய தேவையை பூர்த்தி செய்யும், இதுபோன்ற பல ஆயிரம் நிறுவனங்களை மூன்றாம் உலக நாடுகளில் ஏகாதிபத்தியம் நிறுவுகின்றன. இது சுற்றுச் சூழலை அழிப்பதுடன், மக்களின் ஒரு வயிற்றுக் கஞ்சியையும் பறித்துவிடும்பாதகச் செயலின் தொடர்ச்சியாகும்.

இதை எதிர்த்துவிவசாயிகள் விடுதலை முன்னணி நடத்திய பிரச்சாரம், போராட்டங்களின் இறுதியில் மரங்கள் வெட்டி வீசப்பட்டன. ஏகாதிபத்திய கூலிக்கான அரசு 115 விவசாயிகளை கைது செய்து கொலை முறச்சி உள்ளிட, 9 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு தாக்குதல் செய்துள்ளது. விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த 10 பேர் வரை கைது செய்யப்பட்டனர். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் என்ற வகையில் நாம் எப்பொழுதும் கைகொடுத்து உதவ முன்வர வேண்டும்.

அடமொழி முத்திரை குத்தல்களை செய்யும் பிரச்சாரங்கள், திரிபுவாத கோட்பாடுகள் அனைத்தையும் மீறிய மக்களின் வீதிப்போராட்ட கால்களின் கீழ் இவை சிதறி நசிந்து போகின்றன. மக்களின் அணிவகுப்பு படிந்துகிடந்த தூசிகளை வானுயரக் கிளப்புகின்றன.

சோவியத் மக்களின் போராட்டத்தை உலகுக்கு மறைக்கும் உலக ஏகாதிபத்திய இரும்புத் திரை என்ற பலத்தையும், உடைத்து நொருக்குவர் சோவியத் மக்கள் என்பதை அண்மைய போராட்டங்கள் சூடுபிடித்துக் காட்டு கின்றது. இது ஒரே: யொரு பாதையில் மட்டுமே சாத்தியமானது. ஒரு மார்க்சிய, லெனினிய சரியான தலைமை அந்த ஒன்று இல்லை என்றால் மட்டுமே சோவியத் புரட்சியை சிதைக்க முடியும். அதுவும் நீண்டநாட்கள் சாத்தியமில்லை. ஏனெனில் உலகப் பொருளாதார நெருக்கடி மூன்றாவது உலக யுத்தத்தை வழிநடத்த தயாராகுகிறது.

சோவியத் மக்கள் தமது வாழ்வுக்கு, தமது வெற்றிக்குப் போராடுவது என்பது இன்று உலக நிகழ்ச்சி நிரலில் உச்சாணிக் கொப்பில் இருக்கும் விடயம். அந்தப் புரட்சி உலகத் தொழிலாளர்களின் எழுச்சிக்கும், அத்துடன் உலகிலுள்ள திரிபுவாதக் குப்பைகளை கூட்டியள்ளி குப்பையில் இடும் நிகழ்ச்சிக்கும் மகுடமாக நிற்கும் என்பதை சோவியத் நிகழ்ச்சிகள் சுட்டிக் காட்டுகிறது.

நடைமுறை ஓர் ஆசான், வாழ்நிலை ஓர் ஆசான், கோட்பாடும் ஓர் ஆசான் என்ற உண்மையானது வரலாற்றை பின்நோக்கி நகர்த்தாது. அது எப்போதும் முன்நோக்கியே செல்லும். இந்த நகர்வு ஒரு கமினிச புரட்சியை மீளவும் லெனின், ஸ்ராலின் வழிகளிலேயே ஒழிய வேறு மார்க்கத்தில் அல்ல என்பதை, சோவியத் மக்களின் போராட்டங்கள் இன்று மீளவும் நிறுவுகின்றது. அதை நாமும் முன் எடுத்துச் செல்ல, பாதுகாக்க எமது வாழ்வுவரை போராடுவோம். திடசங்கர்பம் கொள்வோம்.

www.tamilarangam.net



# அமெரிக்க சனநாயக இராணுவத்தின் வக்கிரங்கள்

உலகில் அதிகார வர்க்கத்துக்கு மக்களை கட்டுப்படுத்தும் ஒரு வடிவமான 'ராக்கிங்' என்பது இன்று பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில் நிறுவனங்கள், இராணுவம் என எல்லா இடங்களும் விரவி வன்முறை கொண்ட வக்கிரமாக மாறியுள்ளது.

அமெரிக்க இராணுவம் புதிதாக பயிற்சிக்கு வரும் மாணவர்களை தனது அசிங்கமான வக்கிரமான வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளது என்பது அம்பலமாகியுள்ளது. புதிய மாணவனின் நெஞ்சை நோக்கி பழையவர்கள் மாறிமாறி குத்துவது மட்டுமன்றி, நகங்களால் நெஞ்சைக் கிழித்து தமது கைகளை இரத்தத்தால் தோய்கின்றனர்.




இதை புதிய மாணவன் ஏற்று செய்ய அனுமதிக்க வேண்டும் என்பதுடன் மட்டுமன்றி, அதை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவது எழுதாத ஒரு சட்டமாக, அமெரிக்க இராணுவ வக்கிரங்கள் போட்டோ மூலம் அம்பலத்துக்கு வந்தது. இந்த இராணுவ வக்கிரங்கள் தான் உலக சனநாயகத்தை பதுகாக்கும் நோக்கில், உலக மக்கள் மீது தனது துப்பாக்கியை நீட்டி அடக்கி ஒடுக்கி தனது ஆக்கிரமிப்பை ஈடு செய்கின்றனர்.

இது சனநாயகத்தை மீட்கவும், சமாதானத்தை கொண்டுவரவும் எனக் கூற, அதை வாந்தியெடுப்போர் எதைக் கூறுகின்றனர் என்பதை நாம் சொல்லிப் புரியும் அளவுக்கு நீங்களும் முட்டாள்கள் இல்லைத் தானே. அப்படியாயின் நீங்கள் என்னதான் செய்ய யோசிக்கிறீர்கள் இதற்கு?

படம் இராணுவ வன்முறை



www.tamilarangam.net






2ம் உலக யுத்த காலத்தில் சேர்மனிய தத்துவ இயலாளர் Dictrich Bonhoeffer க்கு துரோகத்துக்காக நாசிகள் மரணதண்டனை வழங்கினர். இதுதான் அப்போதைய சனநாயகமாக இருந்தது.

இவர் கிட்லரை எதிர்த்தும், நாசிக் கொள்கையை எதிர்த்து போராடியதற்கு கிடைத்த தண்டனைதான் மரணம்.

யுத்தம் முடிந்து 50 வருடங்களாக இவரின் குற்றத்தை பொய்யானது என நிறுவ இனவெறி சேர்மனி அரசு முன்வரவில்லை. இன்று பலத்த நிர்ப்பந்தத்தின் பின் அவர் நிரபராதி என அரசு அறிவித்துள்ளது. 50 வருடங்கள் கழித்தே குற்றவாளி இல்லையென அதுவும் நிற்பந்தத்தின் மூலம் அடைய முடிந்ததெனின், இந்த சனநாயகம்தான் என்ன? கொஞ்சம் யோசிப்போமயின் எல்லாமே புரிந்துவிடும்.

## உங்களுடன் சமர்

சமர் தொடர்ச்சியான நிதி நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. தனிப்பட்ட ரீதியில் நாம் எமது சொந்த நிதிவளத்தை சார்ந்துள்ள அதேநேரம், தொடர்ந்து நாம் முகம் கொடுக்கும் சமூக, பொருளாதார நெருக்கடி, சமரின் உயிர் வாழ்வை அச்சுறுத்துகின்றது. இதை உங்கள் முன் வைக்கும் அதே நேரம் சமருக்கு உதவ முன்வருமாறு கோருவதுடன், சமருக்கான சந்தாக்களை தந்தும், புதிப்பித்தும் உதவுமாறு கோருகின்றோம். இது எங்களினதும் உங்களினதும் வாழ்வியலை விளக்கும் ஒரு சிறு சஞ்சிகை இதன் வளர்ச் சியில் உங்களின் பங்களிப்பை எதிர்பார்ப்பது என்பது எமதும் உங்களினதும் தார்மீக கடமையாகும்.

வாசகர்களே! உங்களிடமிருந்து தரமான ஆக்கங்களையும், ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

வாசகர்களே! வெகு விரைவில் உங்களது சமர் இணையவலையில் ('இன்ர நெட்ரில்')வர உள்ளது

www.tamilarangam.net



# சைரிஸ் உள்நாட்டு யுத்தம் பிரன்சுக்கும்-அமெரிக்காவுக்கும் இடையிலானது



உலகில் ஆகக் குறைந்த தலா வருமானத்தைப் பெறும் சைரிஸ் நாட்டில் நடக்கும் உள்நாட்டு யுத்தத்தில், அரசை கவிழ்த்துவிட முனையும் கிளர்ச்சிக் குழுவானது பளபளக்கும் சப்பாத்துக்கள், சீருடைகளுடன், A.K 47 உம் கையுமாக ஆயிரமாயிரமாக ஆயுதபாணியாகுகின்றனர். இது ஒருபுறக் காட்சியாக இருக்க மறுபுறம் எலும்பும் தோலுமாக, வாழ வழியின்றி ஒரு பெரும் கூட்ட மக்கள் பட்டினியில் மடிகின்றனர்.

நீண்ட பாசிச சார்வாதிகார ஆட்சி கொண்டிருந்த மொபூடு பிரான்சினதும், அமெரிக்காவினதும் நீண்டநாள் செல்லப் பிள்ளை. கமினிச எதிர்ப்பை முன்னெடுக்க இவர்களின் வளர்ப்புப் பிள்ளையாக இருந்த இந்த சர்வாதிகார கும்பல் மக்களை கொன்றுபோட்டதுடன், பிரான்சினதும், அமெரிக்காவினதும் தேவைகளை நிறைவு செய்ய பல மக்கள்நலன் விரும்பிகளை கொன்றுபோட்டனர். அப்போது உலக காவலர்களான ஏகாதிபத்தியத்தின் சனநாயகத்தின் சின்னமென அறைந்தீ போற்றினர். இன்று பனிப்போர் முடிவுக்கு வந்தவுடன் ஐரோப்பா, அமெரிக்கா மோதல் தொடங்கிவிட்டது பிரான்சின் காலனியாக இருந்த சைரிஸ் பொம்மை அரசை தூக்கி எறிந்து, அதில் அமெரிக்க சார்பு அரசை நிறுவ கனவுகண்ட அமெரிக்காவின் கனவுதான், இன்றைய சைரிஸ் உள்நாட்டு யுத்தமாகும்.

www.tamilarangam.net



இவ் யுத்தம் உண்மையில் பிரான்சுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் நடக்கவேண்டியது. ஆனால் அது சைரீசில் நடக்கிறது என்பதுதான் இன்றைய உலக சனநாயகமாகும். சைரீசை யார் செல்வாக்கு மண்டலமாக வைத்திருப்பது என்பதில் எழுந்த நெருக்கடி அங்கு மக்களுக்குள் இருந்த அதிர்ப்த்தி உணர்வை அமெரிக்கா பயன்படுத்தி, யுத்தத்தை உள்நாட்டிலேயே நடத்தி பிரான்சின் ஒரு செல்வாக்கு மண்டலத்தை கைப்பற்றி விடும் நிலையில் முன்னேறுகிறது.

சர்வதேச வர்த்தகத்தை ஏகாதிபத்தியம் தனக்கு சாதகமாக வைத்திருப்பதன் மூலம் சைரீசின் உழைப்பை



ஏகாதிபத்தியம் கொள்ளையடிக்கிறது. 1983ல் 225 டொலரை தனி-வருமானமாகப் பெற்ற சைரீசு, 92ல் 260 டொலரையும், 95ர் 120 டொலரையும் பெற்று மிகக் கீழ்நிலையில் இன்று உள்ளது. 94ல் 980 கோடி டொலர் கடன் சுமையை ஏகாதிபத்தியம் சைரீசு மீது சுமத்தியுள்ளதுடன், அதற்கு வட்டியை மேலும் அறவிடுகிறது.

இன்று ஒரு நபருக்கு 947 கி-லோ சோளத்தை உற்பத்தி செய்த போதும் மக்கள் பட்டினியில் இறக்கின்றனர். சோளம், மேற்கு நாட்டு மனிதன் இறச்சிக்கு உண்ணும் மிருகங்களுக்கு என மலிவான விலையில் ஏற்றுமதியாகிறது.

www.tamilarangam.net



1990ல் 3,55,000 மெற்றிக் தொன் செப்பை உற்பத்தி செய்து மலிவு விலையில் மேற்கு நாடுகள் கொள்ளையடிக்கின்றன. 94ல் 80 இலட்சம் வைரத்தை உற்பத்தி செய்த சைரீசு, அதை மலிவு விலையில் ஏகாதிபத்தியங்கள் எடுத்துச் செல்ல அனுமதித்தது. வைர உற்பத்தியில் உலகில் 5வது இடத்தில் நிற்கும் சைரீசு மக்களின் வாழ்கை என்னவோ கடைசி இடத்தில்தான்.

சைரிசின் உள்நாட்டு யுத்தம் ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டு யுத்தமாகும். மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. மாறாக அவ் யுத்தத்தில் ஈடுபடுபவர்களின் மரணங்கள், இழப்புகள் ஏகாதிபத்திய பணக்கார கும்பலின் பணத்தை மேலும் உயர்த்துவதற்கே ஆகும். மக்கள் பட்டினியால் எலும்பாகி இறப்பதை நியாயப்படுத்தும் உலக ஒழுங்குதான் இன்றைய உலக சனநாயகமாகும். இதைப் புரிந்துகொண்டு நாம் உலகைப் புரட்டிப்போட எமது கைகளை உயர்த்துவது எம் எல்லோரினதும் வரலாற்றுக் கடமையாகும். ○

## ஆஸ்திரேலியாவை உலுக்கிய தொழிலாளர் போராட்டம்

உலகெங்கும் தொழிலாளருக்கு எதிராக ஏவிவிடப்படும் மக்கள் விரோத நடவடிக்கைகள் இம்முறை ஆஸ்திரேலியா தொழிலாளரையும் விட்டு வைக்கவில்லை.

தொழிலாளருக்கு எதிரான சட்டத்தை இயற்றிய ஆஸ்திரேலிய ஜனநாயக அரசு தம்மை மக்களின் பிரதிநிதியாக வேறு கூறிக்கொள்கின்றனர். சென்ற வருடத்தின் இறுதியில் வீதியில் இறங்கிப் போராடிய 15,000 தொழிலாளர்கள், பாராளுமன்றக் கட்டடத்தில் ஏறி ஆர்பாட்டம் செய்ததுடன், கொடிகளையும் பறக்கவிட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலீஸ் வன்முறையைக் கட்டவிழ்து விட்டது அரசு. இதனால் 60 மேற்பட்ட பொலீசார் காயமடைந்துடன், சில ஆர்ப்பாட்டக்காரரும் காயமடைந்தனர். ஆட்சிப் பீடங்கள் போராட்டங்களைக் கண்டு பீதியில் உறைய மக்கள் விழிப்புறும் தேவையை உணர்ந்து கைகளை உயர்த்துகின்றனர்.

www.tamilarangam.net






"சரிநிகர்" இதழ் 113ல் (09.01.97) புத்தாண்டு வாழத்துக்களுடன், அதன் ஆசிரியர்க-ளில் ஒருவரான சிவகுமார் கூறுவதைக் கொஞ்சம் பார்ப்போம்:-

"ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைப் பராம்பரியத்தில் சரிநி-கருக்கு முன்னுதாரணமாக ஒரு மாற்றுப் பத்திரிகை இல்லாதது மட்டுமல்ல சமாந்தரமாகக் கூட பத்திரிகைகள் ஏதும் இன்றுவரை இல்லாததும் ஓர் அவலமான சூழல்தான். இவ்வாறான பத்திரிகை ஒன்றைக் கொண்டுவர வேண்டியவர்கள் கூட கட்சிப் பிரச்சாரத்தை கடந்து செல்ல முடியாமல் போனதும், இன்னொரு சாரார் சுவாரயத்தில் மூழ்கிப்போகும் சுப்பர் மாக்கற் பத்திரிகைத் துறைக்குள் நிற்பதுவும் கூட தூரதிர்ஷ்டம் தான்........
மொழியை மீளப் படைக்கவேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு எழுந்தது. உதாரணமாக கற்பழித்தல் என்ற சொல்லுக்கு மாற்றாக ஒரு சொல்லை தரவேண்டியிருந்தது. ஆரம்பத்தில் பாலியல் பலாத்காரம் என்றும் பின்னர், பாலியல் வல்லுறவு என்றும் பாவித்து வருகிறோம்."
என சிவகுமார் தனது புத்தாண்டு வாழ்துக்களுடன், 7ம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் செய்தியில் கூறியவைகளே இவைகள்.

முன் செய்தியைப் பார்த்தால்:- சரிநிகருக்குச் சமாந்தரமாக வேறு ஒரு செய்திப் பத்திரிகையைக் கொண்டுவராது, சிலர் கட்சிப்பத்திரிகையை நடத்துவது நாட்டுக்குத் துரோகம் என மறைமுகமாக சிவகுமார் எச்சரித்து கூறுகின்றார். அதாவது ஒரு மனிதனின் வரலாற்றுக் கடமை கட்சிப்பத்திரிகையை

www.tamilarangam.net



கொண்டுவருவதோ, கட்சியில் சேருவதோ அல்ல. மாறாக நடுநிலை பேசிப்பேசி மக்களை மந்தைகளாக இருத்திவைக்க ஒரு பத்திரிகையை கொண்டுவரவேண்டும் என்கிறார் இவர்.

அது சரி, சரிநிகர் பத்திரிகையை எதைச் சாதிக்கவென கொண்டு வருகின்றீர்கள் என்பதை விளக்கவேயில்லை. மனிதன் போராடும் இயல்புகளை திண்ணையில் இருந்து வாசித்துவிட்டு, ஏப்பம் விட்டு விவாதித்து எழுவதே வேலை என்கின்றாரா சிவகுமார்? இதைத்தான் சரிநிகர் செய்கின்றது. இதுதான் கட்சிப்பத்திரிகைக்கு எதிரான சிவகுமாரின் எதிர் விமரிசனம்.

ரோட்டில் ஒரு பிச்சைக்காரன் பிச்சை கேட்பதைக் கண்டு மனம் வெதும்பியோ, சிறுவர் உழைப்பைக் கண்டு அழுவதோ, விப்ச்சாரியைப் பார்த்து அநுதாபப்பட்டு போகும் 90 வீதமான மக்களின் நிலையிலிருந்து சரிநிகர் எப்படி வேறுபடுகின்றது என சிவகுமாரால் கூறமுடியுமா?

இதையிட்டு கவலைப்படுபவன் ஒரு பகுதி, சிறு பிச்சை போட்டுவிட்டோ, அநுதாபமாக பேசிவிட்டு செல்வதாலோ, இவனின் வாழ்க்கை எப்படி மாறிவிடாதோ, அதேநிலையேதான் சரிநிகர் செய்ய நினைப்பதும், மற்றவர்களை செய்யவும் கோருகின்றனர்.



இது மனிதனை அநுதாபத்தைக் கடந்த, இதன் உண்மையை தோண்டிப் பார்க்க மறுத்த நிலையைச் செய்வதே சரிநிகரின் வேலையாக உள்ளது. இது இருக்கும் இச் சமூகத்தை அப்படியே பேணுவதற்கு அப்பால் எதையுமே குறைந்தபட்சம் கடந்துவிட முயல்வது இல்லை. அடுத்து சரிநிகரானது இலங்கைப் பிரச்சினையிலும் சரி, தமிழ் ஈழப் பிரச்சனையிலும் சரி, உலகிலும் சரி, இன்றுள்ள எல்லாப் பிரச்சினைக்கும் மூல காரணமான ஏகாதிபத்தியம் பற்றி சரிநிகர் எழுதுவதே கிடையாது. ஒரு சில ஆய்வுக் கட்டுரையில் தவிர்க்க முடியாத இடத்தில் அதை மேலோட்டமாக சொன்ன சரிநிகர், ஏகாதிபத்தியத்தின் தலையீட்டை அதன் விரிந்த தளத்தையிட்டு தமது வாசகர்களுக்கு ஒரு மூடிமறைப்பு வேலையாக தொடர்ந்தும் செய்து வருகின்றது. ஏகாதிபத்தியம் இன்று இல்லையெனின் இலங்கை நெருக்கடியும் இல்லை என்ற உண்மையையும், உலகில் சமாதானம் நிலவும் என்ற ஆழம் பொருந்திய எல்லா விடயங்களையும் சரிநிகர்

www.tamilarangam.net



மூடிமறைப்பது ஏன்?

இன்று இலங்கையின் எல்லாப் பிரச்சனையிலும் ஏகாதிபத்தியத் தொடர்பு ஒரு அரசியற் கண்ணோட்டமாக மாற மறுப்பது ஏன்? இது கட்சி வேலை எனக் கருதின் சிவகுமார் ஏகாதிபத்தியத்தை பாதுகாக்க விரும்புகின்றார் என்பதே தெளிவாகும்.



குழந்தை உழைப்பு பற்றிய சரிநிகரின் கட்டுரையில் அது ஏன் இன்று உள்ளது (சமர் - 20 பார்க்கவும்) என்பதை ஆராய தவறி, கட்டுரை, உழைப்பையிட்டு அழுவதில் யாருக்கு என்ன இலாபம். குழந்தை உழைப்பு என்பது 20ம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்கிறது எனின் அது ஏகாதிபத்திய பொருளாதார கொள்கையே காரணம். மறுக்கமுடியுமா சரிநிகரால்? அப்படி இல்லையெனின் கட்டுரையில் ஏன் மூடிமறைப்பு?

இரண்டாது கற்பழிப்பு மொழி தொடர்பாக இதை பாலியல் வல்லுறவு எனப் பாவிப்பது என்பது அந்த குற்றத்தின் முழுமையை, ஆணாதிக்கக் கற்பு கோட்பாட்டை எதுவும் இல்லாத மாதிரி நடித்து மூடி மறைப்பதேயாகும். உதாரணமாக:- பள்ளன், பறையன் என எழுதக்கூடாது என தாழ்த்தப்பட்ட மக்கள் கோரி முடிவு எடுத்தால், அது சாதிக்கொடுமையையும், அதன் இருப்பையும் மூடிமறைக்கும் செயலாகும். இது அடிப் படையில் சாதியிருப்பை பேணுவதாகும். இன்று வசதி யான நாட்டுபுற புலம் பெயர்தலில் தாழ்த்தப்பட்ட இந்தப் பிரிவு கொஞ்சம் வசதியானதும் அதை மூடிமறைக்கக் கோருவதற்குள் உள்ள பூர்சுவா கண்ணேட்டமும் இதில் ஆழப்பதிந்துள்ளது.

ஒரு பொருள் இருப்பது எப்படியோ அதை அப்படியே கோரியே அதை விமர்சிக்க வேண்டும். இது மட்டுமே மாற்றத்தைத் தரும். இதுகளை ஆதிக்கப் பிரிவு கூறிவருவதை எதிர்த்து, எதிர்த்து போராடுபவர்கள் கூறியும் பிரச்சாரம் செய்யவேண்டும்.

ஒரு மோசமான பொய்யான ஒரு மொழியை, சொல்லை, அதற்கு எதிரான போராட்டத்தில் மட்டுமே அதை ஒழித்துக்கட்ட முடியும். இல்லாதவரை மூடிமறைத்து பொய்யான தோற்றத்தை கொடுப்பது அதை உயிர்வாழ வைப்பதேயாகும். கற்பழிப்பு, பெண் கீழானவள், கருப்பன், அரபுக்காரன், தமிழன், பள்ளன், பறையன்.... என்றுள்ள ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய, இதன் மீதுள்ள அடிமைத்தனத்தை

www.tamilarangam.net



ஒழித்துக்கட்ட வேண்டுமெனின் இதற்கெதிரான போரில் தானே ஒழிய சொற்களை ஒழிப்பதில் அல்ல.
உதாரணமாக:- ஆ... .திக்கப் பிரிவைப் பார்த்து நான் கறுப்பன் தான் அதற்கென்னடா?, நான் பள்ளன்தான் அதற்கென்னடா?, நான் கற்பழிக்கப்பட்டடவள்தான் அதற்கென்னடா? எனக் கேட்கும் ஒரு நிலையில் தான் ஆணாதிக்க சக்தி தனது வாயை மூடவும், அதற்கெதிரான போராட்டத்தில் நாம் வெற்றிபெறவும் முடியும்.

மூடி மறைப்பதால் அதன் கொடுமையும் மூடி மறைக்கப்படுகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை

முன்னேறிய பிரிவின் இதற்கு எதிரான இயல்பான எதிர்ப்பு சொற்களை மாற்றுவதில் அல்ல, அந்த சொற்களை எடுத்துவைத்து கிழித்தல் வேண்டும். பொதுமக்களின் ஒரு கருத்தாக, சொல்லாக உள்ள ஒரு விடயத்தை, எடுத்து அதை உடைத்து நொருங்க வைப்பதன் மூலம்அம்மக்கள் அதன் மீதான அறிவை புகட்டவேண்டும். மூடிமறைப்பதால் எதுவுமே நடக்காது. உள்ளுக்குள் உயிர்வாழும் அவ்வளவே.

இவைகளை எல்லாம் கைவிட்டு, கொழும்பு வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்துக்கு இசைவாக, வாழ்நிலையில் ஏற்பட்ட வாழ்க்கை இசைவாக கருத்தை மாற்றுவதில்லை சிவகுமார். எல்லோரையும் சமாதானப்படுத்த, எல்லோரிடமும் நல்லபெயர் கேட்க, கொழும்பு அடக்குமுறைக்குள் பிழைப்புநடத்தும் வகையில் கருத்து, எழுத்தை மாற்றுவதில்லை சிவகுமார். குறித்த நிலைமைகளில் எப்படி எழுதுவது, சொல்வது என்பதுவும், எந்த நிலைமையில் அரசியல் சொல்வது என்பதுவும் கருத்தை கைவிட்டு அல்ல. மாறாக குறைந்தளவு அதைச்சொல்ல முயல்வதும், எழுதுவதும் அவசியமாகும்.



உங்கள் கடந்த 7 வருட 113 இதழ்களில் முதல், இடை, இறுதிக்கும் இடையில் எவ்வளவு குத்துக்கரணங்கள், முரண்பாடுகள் இது ஏன்? முடிந்தால் ஒப்பிட்டுப்பாருங்களேன். உதாரணமாக:- பேச்சுவார்த்தை தொடர்பா கொஞ்சம் எடுத்து அதை மட்டும் ஒப்பிட்டுப்பாருங்கள் மொத்தமே புரிந்துவிடும். இன்று ஒரு பத்திரிகையின் கடமை:- இந்த உலகை மாற்றும் வகையில், மக்களை அதன்பால் அறிவு புகட்டுவதும், வழிநடத்துவதுமே செய்வீர்களா சிவகுமார் அவர்களே?

www.tamilarangam.net








**29-12-96 வீரகேசரி வாரமலரில் மனித உரிமைக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் புத்தியீவிகள் கூறுகிறார்கள்**

"பொதுவான இடங்களில் படையினர் மீது புலிகள் தாக்குதலை நடத்தி ஆத்திரமூட்டகின்ற போதிலும், இராணுவத்தினர் பொதுமக்களை பழி வாங்கும் நோக்கில் தாக்குதலை நடத்தும் சம்பவங்கள் அருகி வருகின்றன." என மனித உரிமையின் பெயரால் யாழ் பல்கலைக்கழக மனித உரிமைவாதிகள் இராணுவத்துக்காக அதன் ஆக்கிரமிப்பை பாராட்டுகின்றனர்.

இராணுவத்தின் சில மனித உரிமை மீறல்களை குறிப்பிட்டு விட்டு பின் ஒட்டுமொத்தமாக புலிகளின் தாக்குதலை மோசமானதாகக் கூறி திட்டித் தீர்கின்றனர். ஒருபக்கம் ஒருசில மனித உரிமை மீறல்களை குறிப்பிட்டு விட்டு மறுபக்கம் நல்ல அம்சம் உண்டென ஒரேயடியாகப் பாராட்டுவது புத்தியீவி ஆசிரியர் குழுவுக்கு கைவந்த கலை. இன்னொரு புறத்தில் புலியைத் திட்டித்தீர்ப்பதும், எல்லாவற்றுக்கும் புலியே காரணம் எனக் கூறி நடுநிலையின் பெயரால் செய்யும் துரோகம் ஒரு வரலாற்று துரோகமே யாகும்.

புலிக்காச்சல் பிடித்துள்ள யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய கோரிக்கை பற்றி கவலைப்படுவதே கிடையாது. சிங்கள ஆக்கிமைிப்புப் படைக்கு தமிழ் மண்ணில் என்ன வேலையென ஆசிரியர் குழுவே கொஞ்சம் சொல்லுங்களேன்? இவர்கள்தான் கிட்லர் போன்றவர்களையும், இவர்களின் ஆக்கிரமிப்புக்களையும் நடுநிலை மனித உரிமைகள் என்று சொல்லி நியாயப்படுத்த கூடியவர்கள். புலிகளின் மக்கள் விரோதம் தமிழ் மக்களின் போராட்டத்துடன் பின்னி பிணைந்துள்ளதுடன், அது தமிழ் மக்களின் உலகக் கண்ணோட்டத்தின் வெளிப்பாடேயாகும். புலிகள் மக்களின் நிஜங்களே ஒழிய வெளியில் இருக்கும் ஒன்றல்ல. மக்கள் விரோத்தை எதிர்க்க வேண்டின் தமிழ் மக்களின் போராட்ட வழிகளி லே ஒழிய, அதை அழிக்கும் வழிகளிலல்ல புத்தியீவிகளே! போராட்ட வழிகளில் முன்னேறுவதன் ஊடாகவே மக்கள் விரோத்தை ஒழிக்க முடியும் என்பதை புத்தியீவிகள் புரிந்துகொண்டால் எமது போராட்டம் மேலும் ஒரு படி முன்னேறுவதுடன், மனித உரிமையை மீட்பதில் ஒரு காலடியை எடுத்து வைப்பதற்கும் சமமாகும். ○

www.tamilarangam.net



சனநாயகத்தின் பட்டுக்கம்பளத்தின் மீது ஏறிய கம்பூச்சிய அரசு, அரசுக்கு எதிரான சனநாயக ஆர்ப்பாட்டத்தின் மீது குண்டுவீசி 16 பேரை கொன்றும், பலரைக் காயப்படுத்தியும் தனது சனநாயகத்தை பாதுகாத்தது. இந்த சனநாயக அடிதடியை விசாரிக்க, இச் சம்பவத்தின் பின்னா எழுந்த அதிருத்தி உணர்வுகளை சரிக்கட்ட சனநாயக விசாரனைக் கமிசனை அமைத்து ஏமாற்றுகின்றது.

கம்பூச்சியாவிலுள்ள கமினிஸ்ட்டுக்களையும் அதன் தலைவர் பொல்பொட் மீதும் நடத்தப்படும் உலகளவிய சேறடிப்புக்களை மீறியும், இன்று உலகில் மிகப்பெரிய கமினிச கொரிலா குழுவாக உள்ளனர். கட்சிக்குள் ஏகாதிபத்தியம் ஊடுருவி நடத்திய பிளவுகளை மீறியும் அவர்கள் மக்கள் போர் தொடுக்கின்றனர்.

உழைக்கும் மக்களின் சின்னமாக, ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக போராடும் அவர்கள் உள்ளூர் கொள்ளைக்காரருக்கு எதிராகவும், ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் போராடுகின்றார்கள் எனின் ஏன்?

இதை எதிர்ப்பவர்களின் நோக்கம் என்ன? இந்தவகையில் அ.மார்கஸ் குழுவும், எஸ் .வி. இராசதுரை கும்பலும், மனிதத்தின் சில பிரிவுகளும், உயிர்பும், சரிநிகரில் சில பேரும், சேரன் மற்றும் ரெஜி ஜெயவர்த்தனா போன்றோரின் நோக்கம் பாட்டாளி வர்க்கத்தை எதிர்ப்பதும், உலக ஏகாதிபத்தியத்தை பாதுகாப்பதுமேயாகும். இப்படி நாம் கூறின் முத்திரை குத்துவது, மரபார்ந்த மார்க்சியர்களின் படிமங்கள் எனக் கூறி விவாதத்துக்கு பதிலளிக்காது விலகி ஓடி ஒளிகின்றனர்.

இன்று தீவிரமாகி வரும்ஏகாதிபத்திய முரண்பாடுகள் சில உண்மைகளை இவர்கள் மீது வெளிக்கொண்டு வருகிறது. அண்மையில் பிரஞ்சு முதலாளித்துவ பிரிவுகள் நடத்திய உரையாடலில் கம்பூச்சிய நிலைமைக்கு அமெரிக்காவே காரணம், பொல்பொட் கட்சியோ அல்ல என ஆதாரங்களுடன் விளக்கினர். பொல்பொட்டும் அதன் கட்சியும் தமது



சனநாயகத்தின் பட்டுக்கம்பளம் ஏகாதிபத்தியத்தின் நிலம்!

www.tamilarangam.net



அரசியலுக்கு இயல்பாக இயங்கினர் என்பதை ஒத்துக்கொண்டனர். அமெரிக்கா தலைமையில் நடந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தின் போது, நீண்ட யுத்தமும், மக்களை தலைநகருக்குள் குவிய வைத்தது மட்டுமன்றி, ஒரு பெரிய லும்பன் பிரிவை உருவாக்கி தனக்கும் சேவகம் செய்யவைத்தது.

காலம் காலமாக உழைத்த நாட்டை விடுவித்த போது நாடு பொருளாதார ரீதியாக எதுவுமே இருக்கவில்லை. அமெரிக்கா ஆக்கிரமித்து குண்டுகளால் எரித்து நாட்டை சாம்பர் ஆக்கியது மட்டுமன்றி, நச்சுக்குண்டுகள் மூலமும் நிலத்தை நாசமாக்கி சுடுகாடாக்கியது. இந்நிலையில் தேசிய பொருளாதாரத்தை கட்டியமைக்க முயன்ற கம்பூச்சிய கம்யூனிஸ்ட்டுக்கள், நீண்டு பரந்து கிடந்த விவசாய நிலத்தை நோக்கி மக்களை செல்லக்கோரினர். அதுமட்டுமே கம்பூச்சியாவுக்கு இருந்த ஒரேயொரு பொருளாதாரமாகும். இதை மறுத்துவித்த முன்னாள் லும்பன்களும், முதலாளித்துவ பிரிவும் ஓர் உள்நாட்டு யுத்தத்தை நடத்தத் தொடங்கினர்.



இதன்போது நடந்த மனித மரணங்கயையே கருசனையோடு ஏகாதிபத்தியம் எடுத்துக் கூற அதைத் தமது திரிபுவாத மார்க்சிய விரோத நிலைக்கு திரிபுவாதிகள் பயன்படுத்துகின்றனர். அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்பு, கொலைத்தாண்டவம் பற்றி அலட்டிக்கொள்ளாத இந்தப் பிரிவு ஏகாதிபத்தியம் சொல்லச் சொல்லும் கிளிப்பிள்ளைகளே! இந்த நவீன மாக்சிய புத்தியீவிகள் மீளமீள கூறுவது கிட்லர், ஸ்ராலின், முசேலினி, பொபொட், சதாம் குசைன். பட்டியலுக்கு அப்பால் பார்ப்பதில்லை. இதைத்தான் ஏகாதிபத்தியமும் கூறுகின்றது. இவர்களுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு உண்டா எனின் இல்லவே இல்லை.

உலகில் இன்று சவுதி, குவைத் உட்பட பல ஆபிரிக்க, அரபு நாடுகள் உள்ளிட பல நாடுகளில் சர்வாதிகார ஒரே ஆட்சியே உள்ளன. ஏன் நையீரியா இன்று இராணுவ ஆட்சியில் உள்ளது. ஆனால் இவர்கள் அதுபற்றி கதைப்பதே இல்லை. ஏனெனில் இவர்களின் எசமானரான ஏகாதிபத்தியம் அதுபற்றி கதைப்பதில்லை. ஏனெனில் அவைகள் அவர்களின் நவ காலனியாகும். ஆனால் இவர்களும்

www.tamilarangam.net



விசுவாசமாக கதைப்பதே இல்லை. வாயை மூடுகின்றனர். வியட்நாம் போரில் ஒரு தாக்குதலில் மட்டும் அமெரிக்கா வீசிய குண்டின் நிறை, 2ம் உலக யுத்தத்தில் ஐரோப்பா வில் வீசப்பட்ட மொத்தக் குண்டின் நிறையைவிட அதிகமாகும். ஆனால் இந்த மாாக்சிய நவீன புத்தியீவிகள் கதைப்பதில்லை. இவர்கள் கூறும் சதாம் குசைனின் ஈராக் மீது அணுமுலாம் பூசிய குண்டுமுதல், பல நச்சுக் குண்டுகளை வீசிக்கொன்ற அமெரிக்காவின் சர்வாதிகாரம் பற்றி மௌனம் சாதிக்கின்றனர். இத்துடன் யுத்தம் முடிந்தபின் இன்று பொருளாதார முற்றுகை மூலம் கொன்று வரும் இலட்சக்கணக்கான பட்டினி மரணங்கள் பற்றி இவர்கள் வாய் திறப்பதில்லை. ஆனால் சதாம் குசைன் சர்வாதிகாரி என கூறமட்டும் பின்நிற்பதில்லை.

தென் அமெரிக்காவிலும், வட அமெரிக்காவிலும் அந்த மக்களை கொன்றொழித்த வெள்ளையினம் பற்றி இவர்கள் மூச்சுவிடுவதில்லை. அவுஸ்திரேலியாவில் அந்த மக்களின் மக்களை கொன்று ஒழித்த இங்கிலாந்தின் வெள்ளையினத்தின் ஆதிக்கத்தை கதைப்பதில்லை. இப்படி உலகில் பலவுண்டு. ஆனால் இவர்கள் எப்போதும் ஏகாதிபத்தியம் எதை எதைச் சொல்கிறதோ அதையதைதயே வாய்பாடாக சொல்கின்றனர்.



கம்பூச்சியாவில் குண்டு வெடிப்பு

ஸ்டாலின், பொல்பொட் பற்றி இவர்கள் கூறி ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்ய மார்க்சியத்தின் மீது தாக்குகின்றனர். தேசிய முரண்பாட்டைக் காட்டி மா-லெ-மாவோயிச சிந்தனைகள் மீது தாக்குகின்றனர். தேசி யத்தை உறுதியாக பிரகடனம் செய்வதாகக் கூறி

www.tamilarangam.net




'தேசியம் ஒரு கற்பிதம்' என விளக்கம் கொடுத்து தேசியம் ஒரு கற்பிதம் என்றதன் ஊடாக தேசியத்தை மறுக்கின்றனர். இதைத்தான் ஏகாதிபத்தியமும் சொல்கின்றது. அதாவது ஒற்றைப் பொருளாதார உலக மயமாதலில் தேசியம் ஒரு கற்பிதம் என்பது ஏகாதிபத்தியத்தின் நிலை. மார்க்சியவாதிகள் மட்டடுமே 'தேசியம் ஒரு கற்பிதம்' என்பதை மறுத்து, அது பொருன் சார்ந்த உலக ஏகாதிபத்தியத்து எதிரான ஒரு போராட்டத்தின் அம்சமாக கருதுகின்றனர். (தேசியம் ஒர கற்பிதம் என்ற வரையறை மீதான எல்லா ஏகாதிபத்திய சார்பு மார்க்சிய திரிபை அம்பலப்படுத்தி மிக விரைவில் சமர் தனியான வெளியீடு ஒன்றை கொண்டுவர உள்ளது) அது அதை தெளிவாக அம்பலப்படுத்தும்.

இன்று உலகில் ஏகாதிபத்தியம் எதைக் கூறுகின்றதோ, எதைச் செய்கின்றதோ அதையே செய்யும் நவீன மார்க்சிய திரிபுகள், இன்று உலகை ஏகாதிபத்திய ஒற்றைப் பொருளாதாரத்தை ஊக்குவிக்க உருவான, உருவாக்கப்பட்ட நச்சு விதைகளே ஒழிய மக்களுக்கு வாழ்வளிக்க உருவானவர்கள் அல்ல.

ஒற்றைப் பொருளாதார உலக மயமாதலில் தேசியம் ஒரு கற்பிதம் என்பது ஏகாதிபத்தியத்தின் நிலை. மார்க்சியவாதிகள் மட்டடுமே 'தேசியம் ஒரு கற்பிதம்' என்பதை மறுத்து, அது பொருன் சார்ந்த உலக ஏகாதிபத்தியத்து எதிரான ஒரு போராட்டத்தின் அம்சமாக கருதுகின்றனர்.

ஸ்ராலின், பொல்பொட் எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும், உழைக்கும் மக்களினதும் பிரச்சனைகள் மீதுதான், அவர்களுக்காக போராடிய தலைவர்களே ஒழிய, சுரண்டும் பிரிவின் தலைவர்களாக எப்போதும் இருந்ததே இல்லை. இது ஓர் அடிப்படையான வரையறையைக் கொண்டு நாம் ஸ்ராலின், பொல்பொட் பற்றிய அவதூறுகளை இனம் காண்பதன் மூலம் பாட்டாளி வர்க்க சிந்தனையை உயர்த்தி பாதுகாப்பது அவசியமாகும்.




www.tamilarangam.net





# இனவாதிகளின் இணைவும்

பரிட்சாத்த தேர்தலும்



தமிழ் தேசத்திக் மீது சிங்களப் பேரினவாதிகளின் கால்கள்..

## தமிழ் இனத்தை அழிக்க நடந்ததே!

தமிழ் மக்களின் தேசவிடுதலைப் போர், இராணுவ தாக்குதல் வாதமாக இன்று சீரழிந்துள்ளது. அதாவது தேசவிடுதலைப் போராட்டம் அரசியல் ரீதியாக, தமிழ் மக்களின் பிரச்சினை மீது வாழ வேண்டியது, இன்று இராணுவத்தின் மீதான தாக்குதலைக் கொண்டு நிய-ாயப்படுத்தும் எல்லைக்குள் புலிகளின் தேசிய விடுதலை போராட்டம் உள்ளது.

இந்நிலையில் தான் பேரினவாதிகள், இன்று தமது கால்களை தமிழ் தேசத்தின் மீது அகல நகர்த்துகின்றனர்.

மூன்றாவது ஈழப்போரின் மதிநுட்பமற்ற முன்னேறிய புலிகளின் தாக்குதலைக் கொண்டும், புதிதாக ஆட்சிக்கு வந்த சந்திரிகாவின் சொல் அலங்கார மூலம், உலக-ளவில் தமிழ் தேச விடுதலைப்போரை பயங்கரவாத போராக சித்தரித்து, உலகளவில் தமிழ் மக்களின் விடுதலைப் போருக்கு எதிரான ஓர் அபிப்பிராயத்தை திரட்டியிருந்தார். இதன் ஆதாரங்களின் மீது ஏறி, வீங்கியிருந்த புலிகளின் இராணுவ கட்டமைப்பை தகர்த்து சந்திரிகாவின் இனவாத இராணுவம், தனது இனவாத சிங்களக் கொடியை பறக்கவிட்டு, அங்கிருந்த மக்களை கொன்று, எரித்து அதில் குளிர் காய்கின்றது.

கடந்த வருடத்தில் மட்டும் யாழ்ப்பாணத்தில் 600 க்கு

www.tamilarangam.net



மேற்பட்டோரை காணவில்லை என சர்வதேச மன்னிப்பு சபை கேள்வி எழுப்பியுள்ளது. இது ஒருபுறம் இனவாத்தின் கட்டமைப்பின் ஒரு வடிவமாக வளர்ச்சி பெற அது போதாது என்பது அரசினதும், ஏகாதிபத்தி யத்தினதும் கவலையாகும். இதை நிவர்த்தி செய்ய இரு நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

- நடந்து முடிந்த தேர்தல் மூலம் எப்படி சிறு பான்மை இனத்தை கொச்சைப்படுத்தும் ஓர் இனவாத திட்டத்தை புகுத்தலாம் என பரீட்சிக்கப்பட்டது.

- சிறிலங்கா சுதந்திர கட்சி என்ற இனவாத அரசும், யூ.என்.பி என்ற சிங்கள இனவாத கட்சியும், சிங்கள இனவாதத்தை பாதுகாக்க கூட்டுச் சேர்ந்துள்ளனர்.

இந்த இரு விடயம் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை சனநாயக வாழ்வியல் உரிமைக்கு, தேசத்தின் இருப்புக்கு பயமுறுத்தும் ஒரு முழு மூச்சான பூதமாக பிணைந்துள்ளது.

ஏகாதிபத்தியமான இங்கிலாந்தின் ஆட்சியுடன் ஒன்றிணைந்த யூ.என்.பி, சிறிலங்கா சுதந்திர கட்சி என்பன தமது இனவாத வன்முறையை கூட்டாக நடாத்த முன்வந்துள்ளது. இதை இலகுவாக செய்ய இனவாத அடிப்படையில் ஒரு தீர்வுப் பொதியை தமிழ் மக்கள் முன் திணித்தபின் செய்ய திடசங்கப்பம் கொண்டுள்ளது. இதற்கான ஆசியை இங்கிலாந்து திரட்டிக் கொடுத்துள்ளது. இன்றைய இன முரண்பாட்டின் மூல நாயகர்களான காலனித்துவ வாதிகளான இங்கிலாந்து இன்று, தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக வரிந்துகட்டி நிற்கிறது.

அவுஸ்ரேலியாவின் பழங்குடி மக்களைக் கொன்று அதன் மீது வெள்ளையின ஆதிக்கத்தை நிறுவிய இங்கிலாந்து, தென் ஆபிரிக்காவில் கருப்பின மக்களை கொன்றும், அடக்கியும் சிறுபான்மை வெள்ளையின ஆட்சியை நிறுவி, இன்று பெயரளவில் ஆட்சியை மாற்றி இங்கிலாந்தின் சகோதர வெள்ளை இனத்தவனின் ஆதிக்கத்தை நாம் இங்கு ஒரு முறை பார்ப்பது இங்கிலாந்தின் கபடத்தை மீனப் பார்க்க உதவும்.

இலங்கையில் ஆட்சிக்கு வரும் இரு பிரதான இனவாத கட்சிகள், தமிழ் இனத்தின் மீதான சிங்கள இன ஒடுக்குமுறையை ஏற்று தம்மளவில் செய்து வந்தன. ஆனால் இன்று ஒன்றுபட்டு செய்ய உடன்பாடு கொண்டிருப்பது உலக வரலாற்றில் முதல்

www.tamilarangam.net

தடவையல்ல.



இஸ்ரேலிய யூத இனவாதம் பாலஸ்தீனருக்கு எதிராகவும், தென் ஆபிரிக்கா வெள்ளை இனவாதம் கருப்பருக்கு எதிராகவும், உலகில் வெள்ளை இனவாதம் கருப்பருக்கு எதிராகவும், மேற்கத்திய வாதம் மூஸ்லிம் மதத்துக்கு எதிராகவும், ஏகாதிபத்திய கொள்ளை மூன்றாம் உலகத்துக்கு எதிராகவும் உள்ள அடக்குமுறை வடிவத்துக்கு பண்பியல் ரீதியில் வேறுபட்ட ஒன்றிணை வுதான் யூ.என்.பி, சி.சு.கட்சியின் இணைவாகும்

எதிர் காலத்தில் இனவாத அடிப்படையில் ஒரு தமிழ் இன அழிப்பு தீர்வுத்திட்டத்தை முன்வைத்து, ஒன்றுபட்ட இன அழிப்பை கட்டவிழ்த்து விட தயாராகுகின்றனர் சிங்கள இனவாதிகள். இதுதான் கூட்டும், தீர்வுத்திட்ட பொதியின் நோக்கம் என்பதை ஒரு நிமிடம் கூட தமிழ் மக்கள் மறக்கக் கூடாது. தமிழ்பேசும் மக்கள் தமது தேச விடுதலையின் அடிப்படை பிரச்சனையின் மீதான கவனத்தை திருப்புவதும், அதை முன்நிறுத்துவதன் மூலம் பேரினவாத நோக்கை இனம் காண்பதும், அதை அம்பலப்படுத்துவதும் இன்று தமிழ் மக்கள் மீதுதுள்ள உடனடியான பணியாகும்.



விடுதலைப் புலிகளை பொறுத்த வரையில் அவர்களின் அரசியல் என்பதும், இதன் இனவாதம் என்பதும், இதன் மீதான முழுமையைப் பார்க்க மறுக்குமென்பது யதார்த்த மானது. புலிகள் இனப்பிரச்சினையை வெட்டி சுருக்கி பார்க்கையில் தமிழ் தேச விடுதலைப் போர் மேலும் பலவீ னப்படும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். தமழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை, அதன் மீதான தெளிந்த அரசியற் பார்வை இன்று முன்வைப்பது புலிகளின் முன்னுள்ள சவாலாகும். இதை புலிகள் செய்வார்களா? என்பதை கடந்தகால புலிகளின் அணுகுமுறை மறுதலித்து நிற்கிறது.

தமிழ் தேசத்தின் சுய நிர்ணயம் இதுதான் இன்று எல்லாவற்றுக்கும் ஆன அடிப்படை மையமாகும். குறைந்த பட்சம் திம்புக் கோரிக்கையை முன் நிறுத்துவதும், அதை அடிப்படையாகக் கொண்டு தேசிய விடுதலைப் போரை மேலும் முன்நோக்கி தள்ளுவதும் தமிழ் தேச மக்களின் முன்னுள்ள அவசரமான பணியாகும். இதை செய்யக் கோரி புலிகளையும், நாம் எல்லோரும் இதை முன் நிறுத்திப் போராடுவதும் எமது வரலாற்றுப் பணியாகும்.

O

www.tamilarangam.net






சரிநிகரே!
உங்களின்
கருத்து
இதில்
எது?
அல்லது
இதைவிட
வேறு
ஒன்றா?

சரிநிகர் 114ல் சரிநிகரின் 'முற்போக்கு' அமைச்சர் பீரிஸ் , பாரிசில் இலங்கைக்கான நீதி வழங்கும் மாநாட்டில் ஒரு பாடசாலை மாணவன் புலியைக் கீறக் கோரின் ஒரு தமிழ் புலியைக் கீறும் அளவுக்கு வன்முறை உள்ளது எனக் கூறியதைச் சுட்டிக்காட்டி தொடர்ந்தும் என்ன கூறுகின்றனர் எனப் பார்ப்போம்.


"சமாதானத்தின் பெயரால் வடக்குக் கிழக்கில் மனிதர் மிருகங்களைப் போல வேட்டையாடிக் கொண்டிருக்கின்ற அரசாங்கம் அங்கு கொல்லப்படும் ஒவ்வொருவரையும் புலி என அறிவித்துக் கொண்டிருக்கையில்...... வடக்கில் மட்டுமல்ல கொழும்பிலும் அதன் சுற்றப் புறங்களிலும் வாழும் தமிழ் மக்களும் கூட புலிகள் தான் என்று அறி விக்கத் தயங்காத ஒரு சனாதிபதியின் அமைச்சரல்லவா பீரிஸ் அவர்கள்". என சரிநிகர் கூறுகின்றனர்.

இதிலென்ன தப்பு இருக்கிறது எனக்கேட்பது எமக்குப் புரிகிறது. அப்படியாயின் இதை ஏன் எழுதுகின்றீர்கள் என கேட்பீர்கள். நாம் அவர்கள் முன்பு கூறிய ஒருசில வார்த்தைகளை திருப்பிப்பார்ப்போம்.
சரிநிகர் - 51ல்
" ஆய்வாளர்கள் அறிஞர்கள் (லால் ஜெயவர்த்தனா, போராசிரியர் யீ.எல் பீரிஸ், கலாநிதி வி.வர்ணபாலா....) முற்போக்குவாதிகள் எனப் பலரை முன்னணிக்குக் கொண்டுவரப் போவதாக சொல்கிற பொ.ஐ.மு யின்


www.tamilarangam.net



அடித்தளம் இன்னமும் சி.ல.சு.க என்பதை தமிழ், முஸ்லிம் மக்கள் மறந்துவிட முடியாது..... தாராள சனநாயகத்தை முக்வைக்கும் ஒரு இளைய புதிய தலைமுறையே பொ.ச.ஐ.மு யை வழிநடத்த இருப்பதாக பரவலாக பேசப்பட்டாலும் இன்றுவரை குறிப்பான எந்த நடவடிக்கையும் சுட்டிக்காட்ட முடியாமலுள்ளது" எனப் புலம்பிய சரி நிகர் பின் அந்த எதிர்பார்த்த நம்பிக்கை " புதிய சந்திரிகையும் வால் வெள்ளியும்" எனத் தலைப்பிட்டு வெளியிட்டிருந்தனர். சரிநிகர் -54ல் "புதிய ஆட்சி" எனத் தலைப்பிட்டு சந்திரிகா குமாரணதுங்கா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிற்பாடு நாட்டு மக்களுக்கு வழங்கிய பொறுப்புமிக்க உரையை இதுவரை கால ஆட்சித் தலைவர்கள் எவருமே தந்திருக்கவில்லை 'மனிதத்துவம்', 'உண்மையான சனநாயகம்', 'சமாதானம்' 'தமிழ் மக்களுக்கு ஒரு நேசக்கரம்' என்று முக்கியமான அம்சங்களை பிரதமர் தனது உரையினதும், தமது ஆட்சியினதும் அத்திவாரமாகக் கொண்டுள்ளார் என்ற மனப்பதிவை அவர் எமக்குத் தந்தார்..... நீண்டகால யுத்தங்கள், தொர்பாக உலக அரங்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் இணக்கப்பாடுகளும் புதிய ஆட்சியின் கொள்கை வகுப்பாளர்களால் புதிய முறையில் கிரகிக்கப்பட்டுள்ளது என்று போராசிரியர் யீ.எல் பீரிஸ் கலாநிதி ஜயதோவா உயங்கொட போன்றவர்கள் தெரிவிக்கின்றார்கள்" என்று சரிநிகர்-54 கூறுகிறது.



சரிநிகர் -114, 51, 54... என மாறுபட்ட கொள்கை விளக்கங்களை தமிழராகிய நாம் சரிநிகராக எப்படிப் புரிந்து கொள்வது என்பதை சரி நிகர் ஆசிரியர் குழு விளக்குமா? எதிர்காலத்தில் புதிய விளக்கம் முற்றிலும் இதற்கு நேரெதிராக ஏதும் வைப்பீர்களா? என்பதையும் கூறுங்கள். அதுதான் வாசகர்களை ஏமாற்றாது. செய்வீர்களா?



www.tamilarangam.net



# சனநாயகப் பெருவில்

## பாசிட்டுக்களின் சனநாயகப் படுகொலை!

உலகில் மிகநீண்ட (127 நட்கள்) பயணக்கைதிகள் விவகாரம் அரச-படுகொலை மூலம் முடிவுக்கு வந்துள்ளது. ஒரு பிரஞ்சு சாதாரண பத்திரிகை உலக மக்களின் அபிப்பிராயத்தையும் இந்த பாசிட்டுக் கொலையை செய்தவர்கள் 'வஞ்சித்தும், சதிசெய்தும;' நடத்தியதாக குறிப்பிட்டிருந்தது.

உலக மக்கள் முன்னும், பெரு மக்கள் முன்னும், கைதிகள் முன்னும் நடுநிலை வகித்த பிரிவுகள் முன் இக்கொலை ஒரு பாசிச படுகொலையாக, மக்கள்விரோத சனநாயக படுகொலையாக இந்த சனநாயக எல்லைக்குள் நாறுகிறது. இந்த அதிரடித் தாக்குதலுக்கு முன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாட்டைவிட்டு வெளி-யேற்றியதன் மூலம், பாசிச தார்ப்பாரின் காட்டுமிராண்டித்தனத்தை இனம் காட்டியது.

பொலீசு, மற்றும் பாராளுமன்றத்தில் இத்தாக்குதலுக்கு முன்னர் பலர் இராயினாமா செய்ததன் மூலம் சனநாயகவிரோதப் போக்கை அம்பலப்படுத்தியது. தக்குதலுக்குப் பின் பாராளுமன்றத்தில் பலத்த எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. பொலிசு பிரிவில் ஒரு பெண் உட்பட பலர் கைதுசெய்யப்பட்டு இத்தாக்குதலுக்கு முன் சித்திரவதை செய்ததும் அம்பலமாகி நாறுகின்றது.

இத்தாக்குதலில் 9 மேற்ப்பட்ட போராளிகள் சரணடைந்த போதும் கைதின் பின்னர் அவர்களை சுட்டு பாசிச வெறியாட்டம் நடத்தியதை கண்ணுற்ற பணயக்கைதிகள் கண்ணீர் விட்டு அழுததுடன், நடந்ததை உலகுக்கு அம்பலப்படுதினர், அம்பலப்படுத்துகின்றனர். இவைகள் பெரு பாசிட்டுக்களின் நடவடிக்கை மட்டமல்ல. உலக பாசிட்டுக்களின் நடைமுறை செயல் வடிவமாகும். இந்தவகையில் இலங்கையில் ரோகன விஜயவீராவை கைதுசெய்த பிற்பாடு கொலை செய்தும், இந்தியாவில் மோதல் என்ற பெயரில் நசல்லட்டுக்ளை தொடராகப் படுகொலை செய்தும், என நீண்ட பல வரலாறுகள் பாசிட்டுக்களுக்கு உண்டு. கம்யூனிட்டுக்கள், மக்கள் நலன் போராளிகளே ஒழிய

இவைகள் பெரு பாசிட்டுக்களின் நடவடிக்கை மட்டமல்ல. உலக பாசிட்டுக்களின் நடைமுறை செயல் வடிவமாகும். இந்தவகையில் இலங்கையில் ரோகன விஜயவீராவை கைதுசெய்த பிற்பாடு கொலை செய்தும், இந்தியாவில் மோதல் என்ற பெயரில் நசல்லட்டுக்ளை தொ-டராகப் படுகொலை செய்தும், என நீண்ட பல வரலாறுகள் பாசிட்டுக்களுக்கு உண்டு.

www.tamilarangam.net




பயங்கவைாதிகளோ அல்ல, மனிதநேயம் கொண்டவர்கள் அவர்கள். கொலைகள் எப்போதும் தீர்வை முன்வைப்பதில்லை. மாறாக சனந-ாயக அரச பயங்கரவாதத்தால் அவகளுக்கு திணிக்கின்றது.

127 நாட்கள் நீடித்த இந்த பணய விவகாரத்தில் எந்த ஒரு பணயக் கைதியையும் கொல்லவோ, சித்திரவதை செய்யவோ இல்லை. ஏன் தாக்குதல் நடந்தபோது பணயக்கைதிகளை கொல்ல வசதியும், நேரமும் இருந்தன. இருந்தபோதும் அவர்களை கொல்லாததுடன் ஆயுதத்தை கீழேவைத்து சரணடைந்ததுடன் உலகுக்கு சிறந்த மனி தநேயத்தின் அடிப்படையை வெளிக்காட்டிய அதேநேரம், அரச பயங்கரவாத பாசிசத்தை அம்பலப்படுத்தினர்.

அத் தாக்குதலுக்கு முன் 200 மீற்றர் நீளமான சுரங்கத்தை அமைத்த அரச பயங்கரவாதிகள், தண்ணீர் குழாய்களுக்கு ஒட்டுக்கேட்கும் கருவியை நகர்த்தி ஒட்டும் கேட்டனர். இதற்கு அமெரிக்கா வழிகாட்ட உலக ஏகாதிபத்திய பயங்கரவாதம் அம்பலமாகியது. அதன்மூலம் ஏகாதிபத்திய படுகொலை அம்பலமாகியது.

'ருபாக்கமாறு' என்ற அமைப்பு சேகுராவின் கோட்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் அமைப்பாகும். இது 'ஒளிரும் பாதை' என்ற அமைப்பிலிருந்து வேறுபட்டதாகும். மா-லெ-மாவோ யிசத்தின் முழுமையைக் கொண்டிராத இவ்வமைப்பு, பெருமக்களின் வறுமைக்கு தீர்வைத்தேடி போராடுகின்றது. இந்தப் பணயக்கைதிகளை பிடித்த கொரிலாக் குழுவுக்கு தலைமை தாங்கிய போராளி முன்னாள் ஆடைத் தொழிற்சாலை தொழிலாளியும், தொழிற்சங்கத் தலைவரும். ஆவர். மிகச்சிறந்த புத்திசாலியான இவர், நீண்ட இழுத்தடித்த பேச்சுவார்த்தை மூலம், எதிரியின் பிரதேசத்துக்குள் நீடித்த போராட்டத்தை நடத்தியது என்பது, இதன் தோல்வியின் ஓர் அங்கமாகும்.

ஆனால் அரச பயங்கரவாதம் உலகில் இன்று அம்பலப்பட்டுப் போய் உள்ளது என்பது, இதற்கு எதிரான போரை உக்கிரமாக்கும். அரசியற் கோட்பாட்டை மறு பரிசீலனைக்கு முன்னெடுக்கும். இவை உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு மேலும் உத்வேகத்தை தயும், புரட்சியின் நெளிவு சுழி வையும் படிக்கக் கோருகின்றது



www.tamilarangam.net



பிரஞ்சு பாராளுமன்றத்தை கலைத்துள்ள இன்றைய சனாதிபதி, தனது காலம் வரைக்கும் பெரும்பான்மை தரக் கோரி யும், பொருளாதாரம் மேலும் தாராள மயமாக்க பெரும்பான்மை தரும்படி கோரி தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

பிரதான கட்சிகளான இன்றைய ஆட்சிக் கட்சியும், எதிரணி சோசலிசக் கட்சியும் அதிக வேறுபாடுகள் எதுவுமற்றதாக இருந்தபோது இதில் எது ஆசிக்கு வரும் எனத் தெரியாத வகையில் இன்றைய புள்ளிவிபரங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இன்று பிரான்சில் வேலை செய்யும் பிரிவில் 20 வீதம் அரசு பிரிவு உழைப்பாளராக உள்ளனர். இதை தனியார்மயம் ஆக்குவதன் மூலம் பொருளாதாரத்தை மேலும் மையப்படுத்த ஒற்றைப் பொருளாதார அலகை அமுல் படுத்தல் செய்துவிட துடிக்கின்றனர்.

மருத்துவப்பிரிவு, போக்குவரத்து, மின்சாரம்...என அனைத்தையும் சர்வதேச பன்னாட்டு கம்கனிகளுக்கு விற்றுவிடுவதன் மூலம் மக்களின் அடிப்படை வசதிகளை இல்லாது ஒழித்தவிட முனைகின்றனர். இன்று இவர்கள் சனநாயகத் தேர்தல் மூலம் மக்கள் ஆட்சி என்ற பெயரில் பன்னாட்டுக்கம்கனிகளின் வெற்றிக்கே வாக்குக் கேட்கின்றனர். பிரான்சில் 435 மிகப்பெரிய பணக்காரரில் ஆகக்குறைந்த சொத்து 110 கோடி ரூபாய். (10 கோடி பிராங்குகள்) இந்தக் கும்பலின் மொத்த சொத்து 5,49,307 கோடி ரூபாயாகும். இது பிரான்சின் வருட தேசிய வருவாயில் அண்ணளவாக மூன்றில் ஒரு பங்காகும்.




பிரான்சின் முதற் கொள்ளைக்காரனின் (பணக்காரனின்) சொத்து 37,400 கோடி ரூபாயாகும். இது இலங்கையின் தேசிய உற்பத்தியை விட அண்ணளவாக 2 மடங்காகும். இந்தப் பணக்காரனுக்கு உலகில் 10வது இடம். உலக பணக்காரரில் முதலாம் இடத்தில் உள்ளவனின் சொத்தோ 99,000 கோடி ரூபாயாகும். இலங்கை மக்களின் வருட சொத்தைவிட இது 5 மடங்காகும்.

இந்த கும்பல்களின் ஆட்சியை நிறுவ அதை ஏற்படுத்த என உருவாக்கப்பட்ட பாராளுமன்றம் இன்று மக்களின் அற்ப அடிப்படை உரிமையை தனதாக்க துடியாய் துடிக்கிறது. ஒரு பிரஞ்சுப் பணக்காரனில் ஆகக் குறைந்த ஒருவனுக்கும் முதலில் உள்ளவனுக்கும் உள்ள இடைவெளி 68 இலட்சம் மடங்காகும். அதாவது முதற் பணக்காரன் 68 இலட்சம் தொழிலாளர்களின் மாதவருமானத்தை சொத்தாக்கியுள்ளான். மறுபுறம் சனநாயக பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் வெறும் 5.5 வீதம் மட்டுமே; ஆனால் பெண்களின் வாக்களிக்கும் உரிமை 53 வீதத்தை பெற்றுள்ளனர். அடிப்படை சனநாயக உரிமையை வழங்க முடியாத இந்த சனநாயகத் தேர்தல் என்பது பணக்கார கும்பலின் ஆட்சிதான் என்பதையும் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

www.tamilarangam.net





# செர்பிய நெருக்கடியும்

## அதன் பின்னணியும்


யூக்கோசிலேவியா உள்நாட்டு யுத்தத்தைத் தொடர்ந்து பல புதிய நாடுகள் உருவானது. இந்தயுத்தத்தை முன் நின்று நடத்திய செர்பிய தீவிர வலதுசாரிகள், மற்றைய தேசிய இனங்கள் மீது பாரிய இன அழிப்பை நடத்தினர். குறிப்பாக முஸ்லீம் பெண்களின் தனித்துவத்தை அழித்தல் என்ற பெயரால் சில ஆயிரம் பெண்களை கற்பழித்து, சிலமாதங்கள் சிறைவைத்து பின் விடுவித்தன் ஊடாக அப் பெண்களுக்கு குழந்தைகளை பிறக்கவைத்து ஓர் இனத்தை அவமானப்படுத்தும் அளவுக்கு வக்கிரம் பிடித்து நின்றனர்.

இந்த தீவிர வலதுசாரி பிரிவு இந்தசனநாயத் தேர்தல் மூலம் வந்தது மட்டுமன்றி, இந்த சனநாயக எல்லைக்குள் தான் எல்லாவற்றையும் செய்து முடிக்கின்றனர். சர்வதேச தலையீட்டை நடத்திய ஏகாதிபத்தியங்கள் யூகோசிலே வியாவின் சில பகுதிகளை தமது செல்வாக்கு மண்டலத்துக்கு கொண்டுவந்ததைத் தொடர்ந்து, யுத்தை நிறுத்தி வைத்த ஏகாதிபத்திங்கள் யுத்தத்தை முன்நின்று நடத்தி அரசை குற்றவாளியாக அறிவித்து அந்த நாட்டின் செல்வாக்கு மண்டலத்தை கைப்பற்ற முயன்றன. இதில் முரண்டு பிடித்த சனநாயகத் தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்த தீவிர வலதுசாரி அரசு அங்கு நடந்த புதிய நகரசபைத் தேர்தலில் தோற்றுப்போனது. இதைத் தொடர்ந்து அந்த சனநாயக சட்ட எல்லைக்குள் இருந்த சட்டம் மூலம் அந்த தேர்தல் மோசடி நிறைந்தது என அதிலிருந்து இரத்து செய்தது.

இதைத்தொடர்ந்து இரு மாதங்களாக நாள்தவறாது நடந்த வீதி ஊர்வலங்கள் மக்களின் மனித உரிமைக்கான போரட்டங்களாக, சனநாயங்களைக் கோரும் போராட்டமாக இருந்தது. இப்போராட்டத்தில் மறைமுகமுகமான தலை யீட்டை நடத்திய ஏகாதிபத்தியங்கள் அவ்வூர்வலங்களை தமக்கு சாதகமாக மாற்றியது மட்டுமன்றி, அந்த நாட்டின் சுயதன்மையை இழக்கவைத்தன. போராட்டத்தில் அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய கொடிகளைத் தூக்கி முன்னணியில் சென்றதுடன், ஏகாதிபத்திய தலைவர்கள் மற்றும் கைக்கூலி கள் என அனைவரும் பங்கு கொண்டனர். போராட்டத்தை ஏகாதிபத்திய தலைமையில் வென்றெடுத்த மிதவாத வலது சாரிகள், தமது தீவிர கமினிச வெறுப்பு போராட்ட வெறியை

www.tamilarangam.net





அன்று கொண்டாடித் தீர்த்துக்கொண்டனர்.

ஏகாததிபத்திய வெற்றியை பறைசாற்றி கொண்டாடிய சதுக்கத்தில் இருந்த, இரண்டாம் உலக நாசிகளை போராடி வென்று நிறுவிய நட்டத்திரத்தை வெட்டியெறிந்தது மட்டுமன்றி, அதை புதிய தலைவன் தனது கைகளில் தூக்கி வெற்றிப் பிரகடனம் செய்தான். தீவிர வலதுக்கு எதிரான மிதவாத வலதுகளின் போராட்டம் இறுதியில் கமினிசத்துக்கு எதிரானதாக காட்டும் வகையில் தமது மக்கள் வி-ரோத ஏகாதிபத்திய வக்கிரத்தை நிறுவினர்.

பிரஞ்சு நாசித் தலைவனுடன் கைகுலிக்கிய செர்பிய தலைவர்களும் அதன் வலது அரசியதுமே உண்மையில் மக்களுக்கு எதிரியாக இருக்க, அதை மறுத்து அதனுடன் போராடுவது போல் காட்டி உள்ளவில் சமரசம் செய்த நிலையில் ஒரு கமினிச எதிர்ப்பு போராட்டமாகவே போராட்டத்தை நடத்தி மக்களின் முதுகில் குத்தினர்

www.tamilarangam.net



பிரான்ஸ்

# கமினிசக் கட்சியின் 29வது காங்கிரஸ்

## பலத்த முரண்பாட்டுடன் முடிந்தது

சோவியத்தில் 50களில் ஆட்சிக்கு வந்த குருசேவ் முதலாளித்துவ மீட்சியை நடத்திய அதேநேரம், பிரஞ்சுக் கமினிசக் கட்சி அதன் வால்களில் தொங்கி அதன் வழியைத் தொடர்ந்தது. உலகில் பல கமினிசக் கட்சிகளின் வழியில் பிரஞ்சுக் கமினிசக் கட்சியும் தொழிலாளர் வர்க்கப் போராட்டத்துக்கு துரோகம் இழைத்தது. இந்த தொடர்ச்சியன துரோகம் அண்மைக் காலமாக பிரஞ்சுத் தொழிலாளியால் சகித்துக்கொள்ள முடியவில்லை. கடந்த சில வருடங்களாக பிரஞ்சு தொழிலாளிமீது நடத்தும் தீவிர அடக்குமுறை, சுரண்டல் என்பவற்றை எதிர்த்து பிரஞ்சு தொழிலாளர் தன்னிச்சையாக எழுச்சி பெறுகின்றனர்.

இந்நிலையில் பிரஞ்சு கமினிசக் கட்சி அப்பட்டமான ஒரு முதலாளித்துவ கட்சியாக இருக்கமுடியாத அளவு நிலைமை மோசமாக, பிரஞ்சு கமினிசக் கட்சி நடிக்க முன்வந்துள்ளது. இனி நாம் 'உண்மையான அரசியலை' முன் எடுப்போம் என்ற வாக்குறுதி பிரகடனத்துடன் தொழிலாளி வர்க்கத்தை சமாளிக்க முனைந்த பிரஞ்சு போலி கமினிசக் கட்சி, ஏற்பட இருந்த உடைவை தற்காலிகமாக தவிர்த்துள்ளது. ஆனால் கட்சி குமுறும் மையமுமாக உள்ளதுடன், எதிர் காலத்தில் கட்சி உடைவதன் மூலம் அல்லது தலைமையை கைப்பற்றுவதன் மூலம் பிரஞ்சு தொழிலாளியின் வீரம் மிக்க போராட்டம் மீளவும் தொடங்கும் என்பதை அண்மைய சில தொடர் போராட்டங்கள் சுட்டி நிற்கிறது. உலக பாட்டாளி வர்க்கம் இன்று விழித்துக் கொள்வது உலகளவில் இன்று ஒரு நிகழ்ச்சியாக உள்ளதை பிரஞ்சு




நன்றி : தீப்பொறி

கமினிசக் கட்சி காங்கிரஸ் நிகழ்வுகள் மீள ஒருமுறை பறைசாற்றி உள்ளது.

www.tamilarangam.net




# SAMAR

'சமர்'
இதழ் - 21
பக்கம் - 64
அரசியல் தத்துவார்த்த
விமர்சன ஏடு

வெளியீடு:-
தமிழ் அகதிகள்
இலக்கிய வட்டம்
பிரான்ஸ்

சந்தாவுக்கான
அன்பளிப்பு:-
ஐரோப்பிய நாடுகள்:-
6-பிரதிகள்-100F
12- பிரதிகள்- 200F
ஏனைய நாடுகள்
12-பிரதிகள்.225F



'SAMAR' ISSUE NO 21 MAY FRANCE

**SAMAR**
**ISSUE NO 21**
**PAGES 64**

**PUBLISHED BY**
**TAMIL REFUGEE**
**LITERATURE CEN-**
**TRE - FRANCE**

**ADDRESS :**
**SAMAR**
**87, RUE DE**
**COLOMBES**
**92600 ASNIERES**
**SURSEINE**
**FRANCE**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்